பருவவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

# இந்திய அரசின் அழைப்பையேற்று கூட்டணிக்குழு புதுடில்லி விரைவு

விலை ரூபா 1-25

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

மலர் 28 சித்திரை 10 ஷஃபா 13 இதழ் 71
யாழ்ப்பாணம் புதன்கிழமை 23-4-1986

## பண்டாரிகுழு மாத இறுதியில் இலங்கைவரும்

[சென்னை]

இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் திடீர் அழைப்பினையடுத்துத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரதிநிதிகள் குழுவொன்று நேற்றுப் புதுடிலலி சென்றுள்ளது.

இக்குழுவில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம், திரு. எம். சிவசிதம்பரம், திரு. ஆர். சம்பந்தன் ஆகியோர் அடங்குவர்.

அண்மையில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜனாப் ஏ சி. எஸ். ஹமீத் இந்திய அரசிடம் கையளித்துள்ள இலங்கை அரசின் யோசனைகள் குறித்து விவாதிப்பதற்காகவே தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கு இந்திய வெளியுறவு அமைச்சகத்திலிருந்து இந்த அழைப்புக் கிடைத்துள்ளது.

இத்திடீர் விஜயம் குறித்து நிருபர்கள் மத்தியில் கருத்து வெளியிட்ட திரு. அ. அமிர்தலிங்கம், தாம் இரண்டு நாட்கள் புதுடில்லியில் தங்கவுள்ளதாகவும், அவ்வேளை இந்திய வெளிவிவகார அமைச்சகக் கொள்கை திட்டமிடல் கமிட்டியின் தலைவர் திரு. ஜி பார்த்தசாரதி, வெளியுறவுச் செயலர் திரு வெங்கடேஸ்வரன், திரு. ரொமேஷ் பண்டாரி ஆகியோரைச் சந்தித்து விரிவான முறையில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் கூறினார். [ரா]

### பண்டாரி குழு இலங்கைவரும

[கொழும்பு]

இது இவ்வாறிருக்க, இலங்கையின் இனப்பிரச்னைதொடர்பான பேச்சுவார்த்தைகளை நடத்த இந்திய காங்கிரஸ்

(5ம் பக்கம் பார்க்க)

● இவ்வாண்டு 4 மாதங்களில்

# 496 ஆயுதப்படையினர் பலி; போராளிகள் 54

## புலிகள் அறிக்கை

(சென்னை)

இவ்வாண்டு ஆரம்பத்திலிருந்து நான்கு மாதங்களாகத் தமது இயக்க வீரர்களால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 496 ஆயுதப்படையினர் பலியானதாகவும், தமது தரப்பில் 54 வீரர்கள் மரணமானதாகவும் 'தமிழீழ விடுதலைப் புலிகள்' விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 7 ஹெலிகொப்டர்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன அல்லது சேதமாக்கப்பட்டன. ஒரு ஆகாய விமானம், ஒரு ரோந்துக் கப்பல் என்பன சேதமாக்கப்பட்டன. ஒரு ரோந்துக் கப்பல் முற்றாகத் தகர்க்கப்பட்டது. 18 இராணுவ வாகனங்கள் தகர்க்கப்பட்டன. இவ்வாறு அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

''எமது மக்களைக் காக்க இறுதிவரை போராடிக் கடந்த 4 மாதங்களில் மட்டும் 54வேங்கைகள் வீரமரணமடைந்துள்ளனர்.

''எமது தோழர்களின் மரணத்தைத் தொடர்ந்து 21-4-86 அன்று இன ஒழிப்பிற்காகத் தொண்டமானாறு முகாமிலிருந்து புறப்பட்டுப் பெரும் அழிவுகள்செய்த 60இற்கு மேற்பட்ட இராணுவத்தினரை எம் தோழர்கள் வீராவேசத்துடன் சுற்றிவளைத்துத் தாக்கியதில் 6 இராணுவ சிப்பாய்கள் பலியாகினர். 7 பேர் படுகாயமடைந்தனர். பல ஆயுதங்கள் எம்மால் கைப்பற்றப்பட்டன'' [மா]

## கிழக்கில் கைதாகி காணாமல் போனவர்கள் 358 ஆக உயர்வு

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் ஆயுதப் படையினரால் கைதுசெய்யப்பட்டுப் பின்னர் காணாமல் போனவர்கள் தொகை 358 பேராக அதிகரித்துள்ளதாகத் தெரிகிறது.

மட்டக்களப்பு மாவட்ட இணைப்பதிகாரியை நேற்றுச் சந்தித்த பிரஜைகள் குழுவினர் காணாமல் போன 358 பேரைக் கொண்ட பட்டியல் ஒன்றைச் சமர்ப்பித்த பொழுதே இந்த விபரம்தெரியவந்துள்ளது.

ஆயுதப்படையினரால்கைது செய்யப்பட்ட 358 பேருக்கும் என்ன நடந்தது: இப்பொழுது அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்றெல்லாம் பிரஜைகள் குழு இணைப்பதிகாரியிடம் கேள்விகள் எழுப்பினராம். (மா)

## அணையை திருத்த உலக வங்கி உதவும்

(கொழும்பு)

கடந்த ஞாயிற்றுக்கிழமை உடைபபெடுத்த கந்தளாய் அணைக்கட்டை திருத்தியமைப்பதற்கு அல்லது மீண்டும் கட்டுவதற்கு உலக வங்கி உதவியளிப்பதாக உறுதியளித்துள்ளதாகக் கூறப்படுகிறது. வாஷிங்டனிலுள்ள நிதியமைச்சர் திரு. ரொனிடி மெல் இலங்கை அரசுக்குத் தெரிவித்துள்ளார். [இ-செ]

சந்நிதிச் சுற்றுடலில்

## விமானக்குண்டுவீச்சு: வீடுகள் கடைகள் தரைமட்டம்

### நேரடிச்சமரில் 11 ராணுவம் பலி

[வல்வெட்டித்துறை]

செல்வச் சந்நிதி கோவில் தேர் எரிக்கப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் இரவு இராணுவத்தினருக்கும் போராளிகளுக்கும் நடைபெற்ற பயங்கர மோதங்களில் பலியான இராணுவத்தினரின் சடலங்களை எடுக்கவிடாது போராளிகள் எதிர்த் தாக்குதலை நடத்திக்கொண்டிருந்தனர்

பிற்பகல் 3 மணியளவில் வானத்தில் பறந்த ஹெலிக்கொப்டரிலிருந்தும் 'பொம்பர்' விமானத்திலிருந்தும்தொடர்ச்சியாக செல்வச்சந்நிதிகோவில் சுற்றுடலில் வீசப்பட்ட குண்டுகள் பலத்த சேதங்களை விளைவித்தன.

இத்தாக்குதலின்போதுஇராணுவத்தினர் சந்நிதி கோவில் வீதியில இறந்து கிடந்த இராணுவத்தினரின் சடலங்களை அப்புறப்படுத்தினர் சுமார் 11 சடலங்களை இராணுவத்தினர் இழுத்துச்சென்றனர். மாலையில் போராளிகளால் மேற்கொள்ளப்பட்ட கடும் எதிர்த்தாக்குதலில் சுமார் 12

(5ம் பக்கம் பார்க்க)

## புலிபாய்ந்தகல் சமர்: புலிகள் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள புலிபாய்ந்தகல் என்னுமிடத்தில் பொலிஸ் கமாண்டோக்களுக்கும் தமது இயக்க வீரர்களுக்குமிடையில் இடம்பெற்ற பலத்த நேரடித் துப்பாக்கிச்சூட்டுச் சமரில் நான்கு கமாண்டோக்கள் பலியானதாவும் 15 சமாண்டோக்கள் படுகாயமடைந்தாகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

''எமது இயக்க வீரரான நிர்மல் வீரமரணமடைந்தார்.

(5ம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சிப் பகுதியில் இரவு, பகல் ராணுவ வேட்டை

[கிளிநொச்சி]

கிளிநொச்சிப் பகுதியில் இரவு பகலாகத் தொடர்ந்து தேடுதல்வேட்டைகளை ஆயுதப்படையினர் மேற்கொண்டுள்ளதால் நகரப் பகுதியும் அடுத்துள்ள கிராமப் புறங்களும் அமைதி இழந்து காணப்படுகின்றன

நேற்று செவ்வாய்க்கிழமையும் இவர்கள் கரடிப்போக்கு, பரந்தன், முரசுமோட்டைப் பிரதேசம் முதலானவற்றில் தேடுதல் நடாத்தினார்கள்.

ஒரு பகுதியினர் யுனியம் பொக்கணைப் பகுதியிலும் மற்றும் ஒரு பகுதியினர் வட்டக்கச்சிப் பகுதியிலும் தீவிரதேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். இச் சம்பவங்களின்போது பலர் கைதாகியிருக்கலாமென அஞ்சப்படுகிறது.

சாதாரண பொதுமக்கள் போன்று படையினர் ஆயுதங்கள் சகிதம் தேடுதலில் ஈடுபடுகின்றனர். இதனால் பொதுமக்கள் மத்தியில் பெரும்பீதி குடிகொண்டுள்ளது.

## திருவிழாவில் வைத்து அப்பாவி இளைஞன் தாக்கப்பட்டு கைது

[மட்டக்களப்பு]

சுவாமி வீதிவலம் செல்லும் பொழுது உண்டியல் குலுக்கிச் சென்ற அப்பாவி இளைஞர் ஒருவர் அதிரடிப்படையினரால் தாக்கப்பட்டு கைது செய்யப்பட்ட சம்பவம் மட்டக்களப்பில் இடம்பெற்றுள்ளது.

நேற்றுமாலை இப்பரிதாப சம்பவம் இடம்பெற்றது.

மட்டக்களப்பு ஆனைப்பந்தி என்னுமிடத்திலுள்ள பிள்ளையார் கோவில் உற்சவத்தின்போது சுவாமிவலம் செல்கையில் இளைஞர் ஒருவர் உண்டியல் குலுககிச் சென்றார் அவ் வீதியல் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த அதிரடிப் படையைச் சேர்ந்தவர்களும் அவ் உண்டியலில் காசு போட்டார்களாம். பின்னர் உண்டியல் குலுக்கிய அந்தஅப்பாவி இளைஞனைப் பலமாகத் தாக்கிய அதிரடிப்படையினர் அவரை கைதுசெய்து தங்கள் வாகனத்தில் ஏற்றிச் சென்றார்களாம். [மா]

## இந்தோனேஷிய முன்னாள் தூதர் மாணிக்கலிங்கத்தின் மகன் கைது

(கொழும்பு)

முன்னாள் இந்தோனேஷியாவுக்கான இலஙகைத் தூதுவரான திரு. மாணிக்கலிங்கத்தின் மகனான ராமானுஜம் மாணிக்கலிங்கம் (வயது 23) புலனாய்வுத்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்

அமெரிக்காவின் மசாசுசெட்ஸ் மாநிலத்தின் தொழில் நுட்பக் கழகத்தின் பட்டதாரியான இவர் தமிழ்த் தீவிரவாத இயக்கங்களுடன் தொடர்பு வைத்திருந்தாரென்ற சந்தேகத்திலேயே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

திரு. ராமானுஜம் மார்ச் மாதம் 27ம் திகதி முதல் காணமல் போய்விட்டதாக அவரது தாயார் கொள்ளுப்

[5ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நான்கு மாதக் கோழிக் குஞ்சு ஐம்பது உடன் விற்பனைக்குண்டு. மொத்தமாக வாங்க விரும்புவோர் நேரில் வரவும். [நோயற்றது]. கலைஞானி, 11/7, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். [C1735]

வலம்புரிச்சங்கு - தெய்வீகத் தன்மை வாய்ந்த வலம்புரிச் சங்கு விற்பனைக்குண்டு. தொடர்பு: ஸ்ரீ ஆழ்வார்கள் ஆச்சிரமம், ஆயர்பாடி ஒழுங்கை, தெல்லிப்பழை. (C-1891)

காரைநகர் வீதியில் பொன்னாலைச் சந்திக்கு அண்மையில் வீதி முகப்புள்ள 12 பரப்புக் காணியும் 1600 சதுரஅடி விஸ்தீரணமும் 3 போஸ் மின்சார இணைப்பு பொருத்தப்பட்ட இரண்டு கட்டடமும் விற்பனைக்குண்டு. ஐஸ்பக்டரிக்கும் இருல் பதனிட்டு ஏற்றுமதி செய்யக் கூடியதும் அரிசி ஆலைக்கும் மற்றும் பாவனைக்கு ஏற்ற உகந்த இடம் தொடர்பு: பொன்னாலைமில்ஸ், பொன்னாலை, C- 1890

நல்ல இன செவ்விளநீர் தென்னம்பிள்ளைகள் விற்பனைக்குண்டு. சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். [C 1858]

பூரண விளைதிறனுடைய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு. பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [C-1837]

நல்ல நிலையிலுள்ள 84 ஸ்ரீ 5948 HONDA- SS 1விற்பனைக் குண்டு. தொடர்பு: சந்திரன் மோட்டார்கராஜ் வீரமாகாளி அம்மன் கோவிலடி C 1924

மலிவான விலையில் பின்னல் சதிரைகள், ஆங்கிலத்தட்டச்சு இயந்திரம் விற்பனைக்குண்டு ஹரிஹரன் என்ரப்பிறைஸ் 337, பலாலி வீதி, பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி. யாழ்ப்பாணம். C 1928

## ஏழாவதாண்டு நினைவஞ்சலி



**கமலாதேவி வித்தியானந்தன்**

அன்புடன் நினைவு கூருவோர்:
அன்புக் கணவன்:
சு. வித்தியானந்தன்
அன்புப் பிள்ளைகள்,
அருள்நம்பி, மகிழ்நங்கை,
அன்புச்செல்வி,
இன்பச்செல்வன்,
சிவமைந்தன்.
''தமிழகம்''
தெல்லிப்பழை.
23-4-86
A591

## தேவை

ஆண்அல்லது பெண் வெளிக்களப்பணியாளர்தேவை விண்ணப்பங்களுடன் 28-4-86-க்கு முன்பு நேரில் வரவும், ஹரிஹரன் என்ரப்பிறைஸ், 337, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (C 1927)

குழந்தைத்தொட்டில் தேவை சி. பிரதாபன், 6/2, கன்னாதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணம். C 1922

லேலன், டீசல் வேலை செய்யக்கூடிய மெக்கானிக் ஒருவரும், கேற் கிறில் வேலை செய்யக்கூடிய ஒருவரும், வில்லுத்தகடு வேலை செய்யக்கூடிய ஒருவரும் தேவை. தொடர்பு: க. சிவலிங்கம், ''சிவலிங்கம் மோட்டார்ஸ்'' 25, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். C1929

நல்ல நிலையிலுள்ள குளிர்சாதனப் பெட்டி (Refrigerator), உறையவைக்கும் குளிர்சாதனப் பெட்டி (Deep-Freezer) தேவை. இனம், விலை விபரங்களுடன் விண்ணப்பிக்க; மனேஜர், சற்குணராஜா அன் பிறதர்ஸ், 660 கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். (C- 1861)

தேனீர்ச்சாலை ஒன்றுக்கு நல்ல அனுபவமுள்ள ரீமேக்கர் (Tea Maker) ஒருவர் உடன் தேவை. விபரங்கட்கு No: 6, Roich Coffee Centre பூபாலசிங்கம் புத்தகசாலைக்கு அருகாமையில், பஸ் நிலைய முன்பாக, யாழ்ப்பாணம் (C1911)

கைத்தறி நெசவு வேலை தெரிந்த பெண் பாலர் உடன் தேவை. ஆறு மாத காலத்தில் மின்தறி வேலை வாய்ப்புண்டு உடன் நேரில் வரவும், க. நவரத்தினம், யாழ் ரெக்ஸ் இன்டஸ்றீஸ், சித்தன்கேணி (C 1904)

ஐஸ் கிறீம் தயாரிப்பவர் தேவை. நேரில் வரவும். லிங்கம் கூல் அன் கோப்பிபார், 52, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம், (C1918)

CLASSES
Cake making, Icing, Decoration, Sugar flowers, Sugar modelling, General cookery-Indian cookery Six months course commencing shortly. Spoken English classes for girls. Mrs T Mather, Lawton Road, Manipay, (Near Hindu College). C 1869

## உஷா ஸ்தாபன இடமாற்ற அறிவித்தல்

யாழ்ப்பாணம், 40 மெயின் வீதியில் இயங்கி வந்த எமது உஷா ஸ்தாபனம்1986-04-16ம் திகதியிலிருந்து இல. 9, ஜும்மா பள்ளிவாசல் வீதி, பெரியகடை, யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதென்பதை வாடிக்கையாளருக்கு அறியத்தருகிறோம்.

சூ. செபஸ்ரியாம்பிள்ளை
முகாமையாளர்.
C 1920

## கல்வி

A/L 87-88 கலை / வர்த்தக வகுப்புக்கள் பிரிவு 'B' ஆரம்பம் 07-05-1986. Modern Education Centre, Karaveddy. [C 1345

## வகுப்புகள்

ரேடியோ அன் ரீவி, வெல்டிங், பிளம்பிங் (நீர்க்குழாய் பொருத்துதல்), மோட்டார் மெக்கானிசம், தட்டெழுத்து, சுருக்கெழுத்து புதிய வகுப்புகள் குறைந்த கட்டணத்துடன் 25-4-86, 26-4-86இல் ஆரம்பமாகின்றன. சான்றிதழ் பெறுமதியானது. Vispa Engineering, 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (C 1895)

English Class, IAB, Short Hand Type writing (English) O/L 1986, மீட்டல் தையல் பூவேலையலங்கார வகுப்புக்கள் நாளை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகின்றன. English- ஜோன் கனகசபை, விஞ்ஞானம் - இரா. செல்வவடிவேல், கணிதம் - சிவ மகாலிங்கம், வர்த்தகமும் கணக்கியலும - தில்லை ரவீந்திரா. விபரங்கட்கு: ரவீந்திரா இன்ஸ்ரிரியூட் T R என்டபிறைஸ், கலைமணிலேன், கட்டைப்பிராய். C 1932

## முதலாண்டு நினைவஞ்சலி



வைத்திய கலாநிதி
**முத்துக்கிருஷ்ணபிள்ளை சண்முகராசா**
M B B S. (Ceylon)
M D (Internal Medicine)
M. D. (Haemotology)
M D. (Oncology)
அன்னை மடியில்:
30-01-1944
ஆண்டவன் அருளில்:
04-05-1985

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக நல்லூர் திவ்விய ஜீவன மண்டபத்தில் 24 4-86பகல் 12 மணியளவில்அன்னதானம் வழங்கப்படும்.

உங்கள் ஆத்மா சாந்திக்காக இறைவனை மன்றாடும்.

பெற்றோர்
C 1912

## இன்று

[யாழ்ப்பாணம்]

கோப்பாய் தெற்கு பழைய வீதி அருள்மிகு வீரபததிர சுவாமி கோவில் சகஸ்ர சங்காபிஷேகமும் திருக்கல்யாண உற்சவமும் இன்று புதன் கிழமை நடைபெறுகின்றன. காலை வீரபத்திர சுவாமிக்கு 1008 கங்கு அபிஷேகமும், நவக்கிரகமூர்த்திகட்குவிஷேட ஸ்நபனாபிஷேகமும் ஏனையபரிவாரமூர்த்திகளுக்கு உருத்திராபிஷேகமும் விஷேட அர்ச்சனைகளும் வழிபாடும் நிகழும் மாலை வீரபத்திர பெருமானுக்குத் திருக்கல்யாணம்நடைபெற்று தேவி சமேதராக திருவீதிவலமும் நடைபெறும். (ஐ)

## சுகாதாரசேவைகள் பிராந்திய பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.

# கிளிநொச்சி அரசாங்க வைத்தியசாலை கட்டிடவேலை

1986ம் ஆண்டு மே மாதம் 9ம் திகதி காலை 10-00 மணி வரை சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் அவர்களால் கீழே குறிப்பிட்ட கட்டிட வேலைக்கு ரூபா 50,000/-க்கு மேற்பட்ட தொகைக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றையதினம் காலை 10-30 மணியளவில் கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் ஒப்பந்தக்காரரோ அல்லது அவரது பிரதிநிதிகளோ சமுகம் அளிக்கலாம்.

இவ்வேலை செய்ய விரும்புவோர் எவரும் அரசகருமவேலை ஒப்பந்தக்காரராகவோ அல்லது உள்ளூராட்சி உதவி ஆணையாளரினால் அல்லது கூட்டுறவு உதவி ஆணையாளரினால் அங்கீகரிக் ப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

இவ்வேலை செய்வதற்கு விரும்புவோர் 1986ம் ஆண்டு மே மாதம் 8ம் திகதி நண்பகல் 12-00 மணிவரை சுகாதாரசேவைகள் பிராந்திய பணிப்பாளர், பணிமனையிலிருந்து கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் திரும்பப் பெறக்கூடிய வைப்புப்பணமாக ரூபா 100/- திரும்பப்பெற முடியாத பணமாக ரூபா 25/- செலுத்தி கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்,

| வேலை இலக்கம் | நிலையத்தின்பெயர் | வேலையின் விபரம் |
|---|---|---|
| 1. | மாவட்டவைத்தியசாலை, கிளிநொச்சி. | கொறிடோர் (Covered Way) கழிவுநீர்குழி |

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டபின் கடித உறையில் அடைக்கப்பட்டு மெழுகு சீல் வைப்பதுடன் கடித உறை இடதுபக்க மூலையில் ''சுகாதார பகுதியின் கட்டிட வேலை'' என்று குறிப்பிட்டு மேற்கூறிய திகதிக்குமுன் இப்பணிமனையில் கிடைக்கத்தக்கதாக அனுப்பவேண்டும். அல்லது இப் பணிமனையில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் போடப்படவேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர்கள் அவருடைய கேள்வி ஏற்கப்பட்டதென அறிவித்தல் கிடைத்தவுடன் ஒரு வார காலத்திற்குள் நியமிக்கப்பட்ட வைப்புப் பணத்தைச் செலுத்துவதுடன் இதற்கான ஒப்பந்தத்திற்கும் உடன்படல் வேண்டும். அவ்வாறு செய்யத்தவறின் அவரது கேள்வி இரத்துச் செய்யப்படலாம்.

தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வித்தொகையின் 5% ஒப்பந்தத்தின்படி வேலையைத் திருப்திகரமாக செய்துமுடிக்க பிணைப்பணமாக பிராந்திய சுகாதார பணிப்பாளர் நியமிக்கும் வங்கியில் கட்ட வேண்டும்.

வேலை திருப்திகரமாக முடிந்தபின் இப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

கேள்வி விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுதல், எதையாவது நிராகரித்தல் அல்லது முற்றாக நிராதரித்தல் ஆகிய உரிமைக்கும் அனைத்து தீர்மானங்கள், இறுதிமுடிவுகள் யாவும் கேள்விச்சபைத் தலைவரைச் சார்ந்தது.

**சுகாதாரசேவைகள் பிராந்திய பணிப்பாளர்,**
யாழ்ப்பாணம்.

சுகாதாரசேவைகள் பிராந்திய
பணிப்பாளர் பணிமனை,
யாழ்ப்மாணம், ஏப்பிரல், 1986. (A 597)

## கரைதுறைப்பற்று ப. நோ. கூ. சங்கம், முல்லைத்தீவு.

# பதவி வெற்றிடம்

## கணக்காளர் தரம் (104. 8)

மேற்காட்டப்பட்டுள்ள பதவிக்கு தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் தலைவர், கரைதுறைப்பற்று ப. நோ. கூ. சங்கம் முல்லைத்தீவு என்னும் முகவரிக்கு 02-05-86ம் திகதிக்குப் பிந்தாமல் பதிவுத்தபால் மூலம்அனுப்புதல் வேண்டும்.

கணக்காளர் தரம் (104. 8)

சம்பளம்-
ரூபா 500/- — 840/-
20X5—30X8

(அ) கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவினரின் சுற்றுநிருப இல. 108/81ல் குறிப்பிடும் 9வது அலகுசம்பளத்தில் கணக்குப் பதிவாளர்அல்லது கணக்குலிகிதர் அல்லது எண்பார்வை லிகிதர் பதவியில் 3 வருடத்திற்குக் குறையாது கடமையாற்றியவர் அல்லது 10வது அலகு சம்பளத்தில் மேற்படி பதவிகள் ஏதாவது ஒன்றில் 6 வருடங்களுக்குக் குறையாது கடமையாற்றியவர்

அல்லது

(ஆ) ஐக்கியஇராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் கல்வி நிலையத்தினரின் இறுதி ஆண்டுப் பரீட்சைச் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக தொழில் நிறுவனங்களில் கணக்கு எண்பார்வைத்துறைகளில் மேற்பார்வைப் பதவியில் 2 வருடங்களுக்குக் குறையாது கடமையாற்றிய அனுபவமுடையவர் அல்லது மேற்படி கல்வி நிலையத்தின் இன்டர்மீடியட் பரீட்சைத் சித்தியுடன் அத்தகைய நிறுவனங்களில் மேற்குறிப்பிட்ட பதவிகளில் 4 வருடங்கட்குக் குறையாது கடமையாற்றிய அனுபவமுடையவர்

அல்லது

(இ) கூட்டுறவுப் பணியாளர் உயர்தரப் பரீட்சை சித்தி அல்லது க. பொ. த. உயர்தரப்பரீட்சையில் கணக்கியல் உட்பட 3 பாடங்கள் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகதொழில் நிறுவனங்களில் கணக்கியல் அல்லது எண்பார்வைத் துறைகளில் மேற்பார்வைப் பதவியில் 4 வருடங்கட்குக் குறையாது கடமையாற்றிய அனுபவமுடையவர்.

வயது: 25 — 45 வரை.

குறிப்பு:
மேற்கொண்டு இதுபற்றிய விபரங்கள் தேவைப்படின் கூட்டுறவு வேலையாளர்ஆணைக்குழுவினரின் சுற்றறிக்கை இல: 108/81ஐப் பார்வையிடவும்.

**பொதுமுகாமையாளர்,**
கரைதுறைப்பற்று
ப. நோ. கூ சங்கம்,
முல்லைத்தீவு.
(A 607)

# ஈழத்தமிழர் ஆதரவாளர் அமைப்பின் மகாநாடு

## என். டி. ஆர். ஆரம்பித்துவைக்கிறார்

சென்னை, ஏப். 22

ஈழத் தமிழர் ஆதரவாளர் அமைப்பின் அனைத்து இந்திய எதிர்க்கட்சிகளின் மகாநாடு அடுத்த மாதம் 4-ம் திகதி சென்னையில் இடம் பெறும். தெலுங்குதேசக் கட்சியின் தலைவரும், ஆந்திரா முதலமைச்சருமான திரு. என். டி. ராமராவ் இம்மகாநாட்டை ஆரம்பித்து வைப்பார். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. மு. கருணாநிதி இம்மகாநாட்டுக்குத் தலைமை தாங்குவார்.

'காந்தி-காமராஜ்' கட்சித் தலைவர் திரு. நெடுமாறன் இம்மாநாட்டுக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் திரு. அடல் பிஹாரி வாஜ்பேய், லோக்தள் கட்சித் தலைவர் திரு. மதுதண்டவதே, உட்பட இந்தியக் கம்யூனிஸ்ட், ஜனதா மற்றும் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் திராவிடக் கழகம் போன்றபல் வேறு கட்சிகளினதும் தலைவர்களும், முக்கியஸ்தர்களும் இம்மகாநாட்டில் பங்குபற்றவுள்ளனர்.

ஈழத்தமிழர்களுக்கு ஆதரவைத் தெரிவிப்பதுடன், இலங்கைப் பிரச்னைக்கு விரைவான தீர்வொன்றை வலியுறுத்துவதே இம்மகாநாட்டின் முக்கிய நோக்கமாகும்.

இலங்கைத் தமிழ்த் தீவிரவாதக் குழுக்கள் மற்றும் தமிழ் அரசியல் குழுக்களின் பிரதிநிதிகளும் இம்மகாநாட்டில் கலந்து கொள்வார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (கி)

# 'விடுதலைப் புலிகளை அங்கீகரிக்கவும்'

## மதுரையில் ஆர்ப்பாட்டம்

மதுரை, ஏப் 22,

தமிழீழ விடுதலைப் புலிகள்' இயக்கத்தை இந்திய அரசாங்கம் அங்கீகரிக்கவேண்டுமெனக் கோரி மதுரையில் சுமார் 250 பேர்ஆர்ப்பாட்டம்செய்தனர்.

இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் இலங்கைத் தமிழ் அகதிகள் என்று தெரிவிக்கப்பட்டது.

மதுரை அண்ணாபஸ் நிலையம் முன்பாக இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் கூடியிருந்தனர். அத்துடன் இப்பகுதியில் ஊர்வலமொன்றையும் அவர்கள் நடத்தினர்.

இறுதியாக உண்ணா விரதமொன்றையும் அவர்கள் மேற்கொண்டனர். இலங்கைத் தமிழர்களின் தீவிரவாத இயக்கமான 'தமிழீழவிடுதலைப் புலிகள்' இயக்கத்தை இந்திய அரசாங்கம், இலங்கைத் தமிழர்களின் ஒரு சுதந்திரப் போராட்ட இயக்கமாக அங்கீகரிக்க வேண்டுமென்று அவர்கள் கோஷமெழுப்பியபடி இருந்தனர். [கி]

## வையந்திமாலா கணவர் காலமானார்

சென்னை, ஏப். 22

பிரபல நடிகையும், இந்திய நாட்டியக்கலைஞரும், இந்தியப் பாராளுமன்ற உறுப்பினருமான வையந்திமாலாவின் கணவர் பாலி காலமானார்

திரு பாலி (வயது60) கடந்த சில நாட்களாக சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையொன்றில் சிகிச்சை பெற்றுவந்தார். மூளையில் ஏற்பட்ட இரத்தக்கசிவே இவரது மரணத்துக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. (கி)

## 'நேட்டோ', 'வார்ஸோவை' ரத்தாக்க கோபச்சேவ் விருப்பம்!

### உலகச் செய்திகள்

கி. பெர்லின், ஏப். 22

''நோட்டோ ''வார்ஸோ'' ஒப்பந்தங்கள் ரத்துச்செய்யப்படவேண்டும். என்று சோவியத் தலைவர் திரு. மிக்கேல் கோபச்சேவ் விருப்பந் தெரிவித்துள்ளார்.

கிழக்குஜெர்மனியில் தொழிலாளர்கள் மத்தியில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவிருப்பத்தை வெளியிட்டார்.

திரு. கோபச்சேவ் மேலும் கூறியதாவது: உலகில் இராணுவச் சூழ்நிலையை நீக்கி, போர அபாயத்தைத் தவிர்க்கும் விதத்திலேயே மேற்குநாடுகளின் நோட்டோ ஒப்பந்தமும், கிழக்கு நாடுகளின் வார்ஸோ ஒப்பந்தமும் ரத்தாக்கப்படவேண்டும்.

அமெரிக்கா இதற்கு முன் வருமானால் 'வார்ஸோ' ஒப்பந்தத்தை ரத்தாக்க சோவியத் யூனியன் பின்நிற்கமாட்டாது என்றார்.

'நோட்டோ' வடஅத்திலாந்திக் நாடுகளைக்கொண்ட அமெரிக்க சார்பு அமைப்பாகும். 'வார்ஸோ' சோவியத் சார்பு நாடுகளைக் கொண்ட அமைப்பாகும்.

இந்த இரு ஒப்பந்தநாடுகளும் தத்தமது பாதுகாப்பு எனக்கூறிக்கொண்டு ஐரோப்பாவிலும், முக்கியசமுத்திரப் பகுதிகளிலும் போராயுதங்களை நிறுவிவருவது குறிப்பிடத்தக்கது.

# வெங்கடேஸ் ராஜதந்திரம்

இலங்கைப் பிரச்னையைத் தற்போது இந்திய வெளியுறவுச்செயலாளராக இருந்து பரிசீலித்து வருபவர் திரு. ஏ. பி. வெங்கடேஸ்வரன். இவர் ஒரு தமிழர் என்பது யாவரும் அறிந்ததே.

சிரியா, சீனா, ஐ. நா. ஆகியவற்றில் இந்தியத்தூதுவராக இவர் பதவிவகித்துள்ளார். ஃபிஜித்தீவிலும் (Fiji) தூதுவராக இருந்துள்ளார். இவர் அங்கிருந்தபோதே அந்நாடு சுதந்திரமடைந்திருந்தது.

அவ்வேளை ஃபிஜியிலிருந்த இந்தியர்களில் ஆயிரக்கணக்கானோர் இந்தியா திரும்பிவிடவேண்டிய அபாய நிலை ஏற்பட்டது. இந்நிலையில் இப்பிரச்னையை சுமுகமாகச் சமாளித்து இந்தியர்களுக்கு ஃபிஜியில் பிரஜா உரிமை பெற்றுக்கொடுத்திருந்தார்.

இதுமட்டுமல்ல எந்த நாட்டிலும் 'கீரியும் பாம்பும்' போன்று இருப்பதுபோல ஃபிஜியில் இருந்த அந்நாட்டின் பிரதமரையும், எதிர்க்கட்சித் தலைவரையும் ஒன்றாகவே இந்தியாவுக்கு அழைத்துவந்து தமது ராஜதந்திரத்தின் சாமர்த்தியத்தை வெங்கடேஸ்வரன் நிரூபித்தார்.

தஞ்சாவூர்க்காரரான திரு வெங்கடேஸ்வரன், தமிழ்ப் பண்பாடு, கலாச்சாரங்களில் மிகுந்த பற்றுக்கொண்டவர். இவரின் மனைவி உஷா வெங்கடேஸ்வரன், வழுவூர் ராமையாபிள்ளையிடம் பரதம் பயின்றுகொண்டவர்.

எத்தியோப்பியாவில் தமது கணவருடன் இருந்தபோது ஒரு நடனப்பள்ளி நடத்தி அந்நாட்டுப் பெண்களைக்கொண்டே அந்த நாட்டின் முன்னாள் மன்னர் ஹெய்லி செலாஸி முன்னிலையில் ஒரு சிறந்த பரதநாட்டிய நிகழ்ச்சியையும் உஷா நிகழ்த்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (கி)

புதன் மஞ்சரி

★ ★ ★ ★ ★

# கோவாவில் சோப்ராஜ்

சர்வதேசக் குற்றவாளி சார்ள்ஸ் சோப்ராஜ் கடந்தவாரம் பம்பாய் பொலிஸாரால் கோவா (Goa) வில் வைத்துக் கைதுசெய்யப்பட்டிருந்தது அமைதி விரும்பிகள் அனைவருக்கும் ஆறுதலளிக்கும் செய்தியாக அமைந்திருந்தது.

புதுடில்லி திஹார் சிறைச்சாலையிலிருந்து கடந்த மார்ச் மாதம் 16ம் திகதி தப்பிச்சென்ற சோப்ராஜ், இந்தியாவின் முக்கிய உல்லாசப்பயண மையங்களில் ஒன்றான கோவாவில் உள்ள விடுதி ஒன்றில் தங்கி இருந்துள்ளார்.

இவரது நடமாட்டங்களில் சந்தேகப்பட்ட பொலிஸார் அந்த விடுதியின் உணவு பரிமாறும் பணியாட்களாக (Waiters) மாறுவேடம் போட்டனர் தொடர்ந்து அவருக்கு குளிர்பானம், உணவுவகைகளைப் பரிமாறி சிறையிலிருந்து தப்பிச்சென்ற சோப்ராஜ் இவர்தான் என்பதை திட்டவட்டமாக உறுதிசெய்த பின்னர், அமைதியாக தாம் பொலிஸ்காரர்கள் என்பதை வெளிக்காட்டி சோப்ராஜைக் கைதுசெய்தனர்.

'ஹிப்பி' போன்று வேடந்தரித்திருந்த சோப்ராஜ் கோவா வரும் உல்லாசப்பயணிகளிடம் போதைவஸ்து வியாபாரங்களில் ஈடுபட முயற்சித்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

42 வயதான இந்த சர்வதேசப் பேர்வழியுடன் 28 வயதான ரிச்சார்ட் ஹோல் என்ற இவரது பிரிட்டிஷ் சகபாடியும் கோவாவில் கைதுசெய்யப்பட்டார்.

சோப்ராஜ் கைதுசெய்யப்பட்டசமயம், அவரிடம் ஒரு கைத்துப்பாக்கி ஒன்றும் காணப்பட்டது. ஆனால் அவர் அதனை எதுவும் செய்யாது வைத்திருந்தார். (கி)

★ ★ ★ ★

# நிறங்களும் பயன்களும்

சூழலிலும், நாம் உபயோகிப்பனவற்றிலும் உள்ள நிறங்களும் நமது சுபாவங்களை, உணர்வுகளை நிர்ணயிக்கின்றன. இதனை நம்புவதற்கு பலர் சிரமப்படுவார்கள் ஆனால் பல அறிஞர்கள், நிறங்கள் ஏற்படுத்தும் மாற்றங்களையும், பயன்களையும் பற்றி ஆராய்ச்சி நிகழ்த்தியுள்ளார்கள்.

பிரிட்டிஷ் ஆராய்ச்சியாளர் ஒருவர் ஒரு விருந்துபசாரமொன்றை ஏற்பாடுசெய்தார். அதில் தமது நண்பர்கள் சிலரை அழைத்திருந்தார். விருந்து மண்டபத்தில் பல்வேறு உணவுப் பண்டங்களை வைத்திருந்தார். கூடவே அம்மண்டபத்திலிருந்த மின்னொளியை இடைநடுவில் அவர் சாம்பல்நிறமாக மாற்றினார். நல்ல பசியுடன் அவ்விருந்துக்கு அழைக்கப்பட்டிருந்தவர்கள், இந்த நிறமாற்றத்தினால நோயாளிகள் போன்று அவ்வுணவை உண்ண முடியாது சங்கடப்பட்டனராம்.

இந்த ஆராய்ச்சி மூலமும், இதுபோன்ற வேறு ஆராய்ச்சி மூலமும் தொழிற்சாலை, ஓய்விடம், பாடசாலை, காரியாலயம் போன்றவற்றுக்கு பொருத்தமான நிறங்கள் பூசப்படவேண்டுமென்பது அறியப்பட்டது கூடவே மனித சுபாவங்கள். உணர்வுகளில் வர்ணங்கள் செலுத்தும் செல்வாக்கும் புலனாயிற்று (ப)

## பனை ஓலையில் திருவாசகம்

சிதம்பரம் நடராஜர் ஆலயத்தில் இன்றும் மாணிக்கவாசகர் பனை ஓலையில் எழுதிய திருவாசக, சுவடிகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன இச்சுவடிகள் வருடத்துக்கு ஒருமுறை தான், பக்தர்களின் பார்வைக்கு வைக்கப்படுவது வழக்கம். இது சிவராத்திரி தினத்தில் தான் நடைபெறுகிறது.

—ஸச்சி

## வயோதிபத்தை விரட்டும் சோவியத் கண்டுபிடிப்பு

மார்புக்குப் பின்னால் மறைந்திருக்கும் 'தைனர்ஸ்' என்றசுரப்பியே உடலின் பாதுகாப்பைக் கவனித்தும், கலன்களுக்குப் பயிற்சியளித்தும் வருகிறது

மனிதன் வயதாக, வயதாக இந்தச் சுரப்பியின் தொழிற்பாடும் மந்தமடைந்து மனிதகலன்களுக்கு பயிற்சி அளிக்க முடியாமல் போய்விடுகிறது. எனவே உடல் தளர்வடைகின்றது

இதை நிவர்த்திசெய்யும்வகையில்சோவியத் விஞ்ஞானிகள், 'மாஸ்கோ மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தில் ஓர் ஆய்வொன்றை மேற்கொண்டார்கள். அதன்பயனாக கண்டுபிடிக்கப்பட்டபொருள் 'தைனர்ஸ்' சுரப்பியை பழைய நிலைக்குக் கொண்டு வருவதுடன் திசுக்களையும் இயங்க வைக்கின்றது.

இந்த வயோதிபத்தை விரட்டியடிக்க சோவியத் விஞ்ஞானிகள் ஆராய்ச்சியை மேற்கொள்ள முதலில் தேர்ந்தெடுத்தபொருள் ஒரு பசுக் கன்றுக்குட்டியேயாகும். (பி)

## மணி வாக்கு

வானின்றிடிக்கிலென் மாகடல் பொங்கிலென்
கானின்ற செந்தீக் கலந்துடன் வேகிலென்
தானென்றி மாருதஞ்சண்டம் அடிக்கிலென்
நானென்றிநாதனை நாடுவன்நானே.

—திருமந்திரம்.

# நமதுநோக்கு

## முருகன்சந்நிதியில் சுடுபழம்!

லிபியாவில் கானமயிலாடிக் களைத்திருக்கும் வேளையில், தூரஇலங்கையில் வான்கோழி ஆட்டம் நடைபெறுகிறது. முருகதலங்களில் ீகச்சிறந்ததலமாகிய தொண்டைமானாறு முருகன் சந்நிதியில் வான்கோழி தன் பொல்லாச் சிறகை விரித்தாடினசெய்தி நாகரிக உலகத்துக்கு இன்னொரு அதிர்ச்சியாகும்.

மன்னாரில் திருக்கேதீச்சரம்; தொண்டைமானாறில் சந்நிதி; திருகோணமலையில் கோணேஸ்வரம்- இவற்றைத்தேடி அழிக்கமுயலும் இலங்கை ராணுவம் அமெரிக்க படைப் பலத்திலும் மிகப் பெரியதோ என அஞ்ச வேண்டியிருக்கிறது.

அது மட்டுமல்ல; புத்த பெருமான் விஜயஞ்செய்ததாகச் சொல்லப்படும் நாகதீபத்தில் உலகின் மாபெருஞ் சக்திபீடங்களிலொன்ருன நயினுதீவு நாகபூஷணி அம்பாளுக்கு விடுத்த சவாலும் இன்றைய உலகில் விண்ஆட்சி விரட்டியடிக்கப்படுகிறதென்ற அச்சத்தைக் கிளப்பியிருக்கிறது றீகனின் நட்சத்திரப் போரின் முன்னேடியாகவிருக்கலாம்.

கோவில் தேர் தீப்பற்றி எரிந்தபோது குருக்களின் நெஞ்சிலும் நிச்சயம்நெருப்பெரிந்திருக்கும். அதனைப் பார்ப்பதற்கு அவர் ஓடிச் சென்றதை ஒரு தன்னியல் பற்ற செயலென்றே சொல்லவேண்டும்.

குருக்களும், உதவியாளரும் படையினரால் நிர்வாண மாக்கப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்ற செய்தியில் நிர்வாண நிலை குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது எதனைக் கருதுகிறது? ராணுவமரபையா அல்லது ஆன்மிக டயிற்சியையா என்பது தெளிவாகவில்லை. நிர்வாணநிலையில் உயிர் விடுவது தூக்குத் தண்டனைக்குமுன் நடைபெறும் சம்பிரதாய வழிபாடாக இருக்கலாம்.

முப்போதும் திருமேனி தீண்டும் அடியவர் இறைவனை எந்தச் சந்தர்ப்பத்திலும் 'சுடுபழம்' விரும்பிக் கேட்டிருக்கமாட்டார். அத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் சுப்பிரமணியக் கடவுள் எருமை மேய்க்கும் சிறுவனைப்போல் உருவெய்தி அன்றொருநாள் ஒளவையார் கிழவியை பரிகாசஞ் செய்ததுபோல் இன்று தம்முடைய அடியவருக்கு இன்னொரு சுடுபழம் போட்டிருக்கமாட்டார்.

இலங்கை ராணுவத்தின் இச்செயலுக்கும் தெய்வத்தின் திருவிளையாடலுக்கும் ஒற்றுமை காண்பதரிது.

அவனன்றி ஓர் அணுவும் அசையாதென்ற தாயுமானவர் திருமொழி என்றும் பொய்த்ததில்லை நாம் அதன் ஆழத்தை அறிய முடியாததால் இன்று உலக அரங்கிலும், எங்கள் நாட்டிலும் உருவெடுத்திருக்கும் அழிவுச்செயல்கள் தெய்வத்தின் பெரும் திட்டத்தில் ஒரு சிறு பகுதியென்று கொள்ளத் தயங்குகின்ரேம்.

லிபியாவின் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதல் சர்வதேச பயங்கரவாதத்தை ஒழிக்க உதவும் செயலென்ருல் சந்நிதி முருகன் தேரையும், அத்தேரில் ஆண்டுதோறும் பவனி வந்து பல்லாயிரம் பக்த கோடிகளுக்கு அருள்பாலிக்கும் முருகனுக்கு நித்திய பூசைசெய்யும் குருக்களையும் அழித்தசெயல் பயங்கரவாத ஒழிப்புச்செயலென்று கொள்ளவேண்டும்.

உலகில் வாழும் எந்தச் சாதாரண மனிதனும் எம்மதத்தவன் நிறத்தவனுனாலும் இந்த ஒற்றுமையில் முரண்பாடு காண்பது ஒருதலை. இந்த முரண்பாட்டுக்கு உறுதியளிப்பது இலங்கை பாதுகாப்பு அமைச்சர் வானொலியிலும் தொலைக்காட்சியிலும் விடுத்த அறிவிப்பு, வழமைபோல் பூசை முதலிய கருமங்களை தொடர்ந்து நடத்சுலாமென்பதே அந்த அறிவிப்பு.

வானொலியையும், தொலைக்காட்சியையும் நம்பி மோசம்போனேமே என்று அவலக்குரல் எழுப்புவது பலனற்றது என்று நாம் பன்முறையும் எச்சரித்திருந்தோம்.

அது எவ்வாருயினும் வரலாறு எவ்வாறு தொடருமென்பதை நாம் இருள் நிலையிலும் யூகிக்கமுடிகிறது. இருள் நீங்கும்நிலை தென்படுகின்றது.

சிங்களம், தமிழ், இஸ்லாம் என்ற பேதமின்றி, மக்கள் யாவர்க்கும் பொதுவான இறைவனை இலங்கை மக்கள் கதிர்காமத்தில் வழிபடுகின்றனர். பகைவன் தமிழனுயிருந்தாலும், அவனை வெலும் ஆற்றல் அளித்த கதிர்காமத் தெய்வத்துக்கு ஆலயம் அமைத்தவன் துட்டகெமுனு எனும் அரசன் என்று சிங்கள நூல்கள் கூறுகின்றன.

கதிர்காமத் தெய்வமே, சந்நிதியிலும் குடிகொண்டிருந்தால் பகைவன் யாராயிருந்தாலும் அதனை அழிக்கும் ஆற்றல் அளிப்பானென்பது நிச்சயம்.

கோயிலையும் குருக்களையும் அழிப்பது பயங்கரவாதச்செயலென்று நிரூபிக்கவேண்டுமா?

கேடு வரும்போது மதிகெட்டுவருவதை நாம் படும் துன்பத்திலும் காண முடிகிறது.

### நீர்வையில் இன்று

[யாழ்ப்பாணம்]

நீர்வேலி அருள்மிகு தேவஸ்தான ரதோற்சவம் இன்று புதன்கிழமை நடைபெறும். காலை 8 மணிக்கு வசந்தமண்டப பூசையும் 9 மணிக்கு கோபுரதரிசன விசேடபூசையும் 10 மணிக்கு ரதப்வீதி வலம் வருதலும் நடைபெறும் மாலை நிகழ்ச்சியாக வித்துவாட்டி திருமதி வசந்தா வைத்தியநாதனின் விசேச சொற்பொழிவும் இடம் பெறும். [ஐ]

## 'ஜே. ஆரின் அரசியல் தீர்வு

# இந்திய மக்கள் கவனத்தைத் திசைதிருப்பும் முயற்சி'

## 'சந்திரகாசன்' பேட்டி

(முன்னைய தொடர்ச்சி)

''இலங்கையில்1956ம் ஆண்டுதான் முதன்முதலில் இனக் கலவரங்கள் ஆரம்பித்தது. இரண்டாவது இனக்கலவரம் 1958ல் நடந்தது. 1958க்குப் பிறகு நடந்த நிகழ்வுகளெல்லாம் அரசாங்கத்தால் செய்யப்படும் பயங்கரவாதம் என்று சொல்லலாம்: ஏனென்ருல் ஒரு அரசாங்கமே திட்டமிட்டு அதைச் செய்து கொண்டுவருகிறது''

இவ்வாறு திரு. எஸ். ஸி சந்திரகாசன் துக்ளக் ஆசிரியர் சோவுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அப் பேட்டியில் திரு. எஸ். ஸி. சந்திரகாசன் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

''இராணுவ ரீதியான ஆயுதம் ஏந்தி நடக்கின்ற போராட்டமானது ஆரம்பமாவதற்கு முதற்காரணம், அரசாங்கம் மக்களைக் கொன்று குவிக்கும் முடிவிலேயே இறங்கியது. 1961ம் ஆண்டு தமிழ்ப் பகுதிகளில் ஆரம்பமான சத்தியாக்கிரகப் போராட்டத்தை அரசு பயங்கரவாதத்தினுல் முறியடித்து தலைவர்கள் எல்லோரையும் சிறையில் அடைத்தார்கள்.

### அப்பாவிகளே கொல்லப்பட்டனர்

''ஒருஅரசாங்கத்தின் அணுகுமுறையின்படி ஆயுதம் தாங்கி ஒரு போராட்டம் நடத்தினுல் அதைக் குற்றமாக அரசாங்கம் கணிக்கும். அந்த இடத்தில் நாங்கள் சொல்லுகிற கருத்து என்னவென்ருல், ஆயுதம் தாங்கிய போராளி யாராவது தன்னை அரசாங்கம் சுட்டுக்கொன்றது என்று சொல்லிக், குற்றம் சாட்டியது அல்ல. நாங்கள் சொல்லுகிற குற்றம் இந்தப்போராட்டத்திலே நேரடியாகக் கலக்காமலும், ஆயுதம் காவாதவர்களுமாக இருக்கின்ற அப்பாவி மக்கள், ஏறத்தாழ 95 சதவிகித மக்கள் கொல்லப்பட்டிருக்கிருர்கள். அதாவது கொல்லப்பட்டவர்களில், பாதிக்கப்பட்டவர்களில் ஏறத்தாழ 95 சதவிகித மக்கள் அப்பாவிகளே ஒழிய அரசியல் ரீதியாக இயக்கத்தில் ஈடுபட்டவர்கள் அல்ல.

''விடுதலைப் போராளிகள் சிலரை 'சமூக விரோதிகள்' என்று அடையாளம் காட்டி அவர்களுக்கெதிராகத் தண்டனை வழங்குகிருர்கள். அதனை நாங்கள் நியாயப்படுத்த மாட்டோம். என்ருலும் அவர்கள் அரசியல் கருத்து வேறுபாட்டுக்காக கொல்கிருர்கள் என்று சொல்லமுடியாது. ஒரு அரசியல் கருத்து வேறுபாடு கொண்டவர்களைவிட அதற்கு மேற்படியாக அரசுக்குத் தகவல் கொடுக்கிறவர்களாகவோ, அல்லது தங்கள் இயக்கங்களிலிருந்து வெளிப்பட்ட காரணத்திற்காகவோ, அல்லது தங்களுப்குப் பிரச்னை கொடுக்கின்ற காரணத்திற்காகவோ, சிலநடவடிக்கைகளை எடுப்பதுண்டு. அதனை நாங்கள் நியாயப்படுத்தாவிட்டாலும், அரசியல் காரணங்களுக்காக அரசியல் வேறுபாட்டுக்காக கொல்கிருர்கள் என்பதை நாங்கள் ஏற்க மாட்டோம்.

### மன்னிக்க முடியாத குற்றம்

விடுதலைஇயக்கங்களைச்சார்ந்தவர்கள் ஒருவரை ஒருவர் ஒழித்துக்கட்டுவது மன்னிக்க முடியாத குற்றமாகும் அவர்களது நியாயப்படியும் அதுமன்னிக்கமுடியாத குற்றமாகும். அதாவது ஒரு போராளியை இன்னெரு போராளி அரசுக்கெதிராக அரச பயங்கரவாதத்திற்கு எதிராக உபயோகப்படுத்தப்படவேண்டிய ஆயுதத்தினுல் கொல்வது மன்னிக்க முடியாத குற்றம் என்பது என்னுடைய கருத்து.

### அரசியல் தீர்வு என்பது திசைதிருப்புகின்றயுக்தி

இனப்பிரச்னைக்கு ''அரசியல் தீர்வுக்குத் தான் தயார்'' என்று ஜனதிபதி கூறுவதின் முக்கியத்துவம் என்னவென்ருல் த போது இந்தியாவினுடைய ஆதரவு அல்லது இலங்கையில் நடப்பதைப்பற்றி இந்திய, மக்கள் கவலைப்பட்டு இந்தியா இந்த விஷயத்தில் தலையிடவேண்டும் என்ற ஒரு கருத்து இருக்கிற காரணத்தினுல் இந்தியாவையும், இந்திய மக்களையும் திசை திருப்புகின்ற யுக்தியாகத்தான் அரசியல் தீர்வை அவர் இடை இடையே சொல்லிக்கொண்டுவருகிருர்.

### பேச்சுவார்த்தை தேவை இல்லை

அரசியல் தீர்வு என்று அரசாங்கம் நினைத்தால் எத்தனையோ உதவிகளை தமிழ் மக்க

[5ம் பக்கம் பார்க்க]

## இன்று தேரேறிவரும் வீணியவரை ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள்

வடபால் கோவில்கடவை என்னும் குறிச்சியில் அமைந்த ஆலயங்களில் பழமையான ஆலயமாக விளங்கும் வீணியவரை ஸ்ரீ இராஜராஜேஸ்வரி தேவஸ்தான வருடாந்த உற்சவம் கடந்த 9 நாட்கள் நடைபெற்று இன்று தேர் உற்சவம் நடைபெறுகிறது.

பலகால வரலாறுகளைக் கொண்ட இவ் ஆலயம் கடந்த 10 வருடததுக்கு முன்பு புனரமைக்கப்பட்டு அலங்கார உற்சவம் நடைபெற்று வந்தது. இவ்வருடம் முதன்முதலாக கொடிஸ்தம்பம் நாட்டி கொடியேற்றவிழா இடம் பெற்றது. இத்துடன் புதுமணிக் கோபுரமும், வைரபர் ஆலயமும், வசந்தமண்டபமும், யாகசாலையும் கட்டி ஆலயம் புதுமெருகுடன் விளங்குகிறது.

வடபால் கண்ணகிக்கு தனி ஆலயம்அமைத்த பெருமையை கொண்டு விளங்கும் இவ்ஆலயத்தில் பண்டைய முறைப்படி சித்திராபூரணைக்கு இலைக் கஞ்சி வைபவம் சிறப்பாக வருடா வருடம் நடைபெறுகிறது. இம்முறை அவ்வைபவம் தீர்த்த உற்சவத்துடன் நடைபெறவிருப்பது மேலும் சிறப்பை அளிக்கிறது.

ஆலய ஆதீனகர்த்தா அ துரைச்சாமி ஐயரின் இராப்பகல் அயராத முயற்சியால் பொதுமக்கள் உதவியுன் ஆலயம் இன்று புதுமெருகூட்டப்பட்டு சிறப்புடன் விளங்கி அடியார்களுக்கு அருள்பாலிக்கிறது.

ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ மறைவண்ண மணிவண்ணக் குருக்கள் ஆசாரமுறைப்படி கிரியைகளை சிறப்பாக செய்து வருவதும் ஒரு பெருந்துணையாக அமைந்துள்ளது.

நாட்டின் பல பாகத்திலுமிருந்து வரும் அடியார்களுக்கு ஏற்ற ஒழுங்குகளை ஆலயத்தினர் சிறப்பாக செய்துள்ளனர்.

ஞா. இராமநாதன்

★ நீர்வை முருகன் ரதோற்சவம் இன்று

### கூர்வேலெடுத்தசுரர் குலமழித்திடும் கந்தன்

ராகம்: கம்பீரநாட்டை தாளம்; ஆதி

பல்லவி

ஊர்கூடி வடம்பிடித்து உளமாரத் தொழுது விழி
நீர்மேவித் தேரிழுக்க நீர்வைமுருகன் வந்தான்

அனுபல்லவி

கூர்வேலெடுத்தசுரர் குலமழித்திடும் கந்தன்
பார்மீது பக்தர்களைப் பாலித்தருள் செய்ய

சரணம்

அகந்தை கொண்டே அரக்கர்
அக்கிரமம் செய்யச்
செகந்தனில் செவ்வேலேந்திச்
செய்தனன் துஷ்ட நிக்கிரஹம்
அகந்தனில் மயில்மீதில்
ஆடும் முருகையன்
இகந்தனில் நீர்வேலிச்
செழுந்தமிழ்ப் பதியிலே

— கவிமாமணி

★

இன்று நுணசை முருகமூர்த்தி தேர்:

### வந்தருள் தாராய்

பல்லவி

கந்தா உனையன்றி காண் பொருள் வேறுண்டோ
கடம்பா நீயன்றி இடும்பைகள் தீருமோ
[கந்தா...]

அனுபல்லவி

தந்தால் நீயன்றித் தரணியில் யார் வல்லார்
வந்தால் நீயன்றி வரம் தர யாருள்ளார்
[கந்தா...]

சரணம்

நோயுற்ற வேளையில் நோயற்றுப் போகவே
தாயற்ற பிள்ளையாய் சிறகற்ற புள்ளதாய்
வாயற்ற ஊமையாய் வாடுவதறிந்தும் நீ
வந்தருள் தாராயோ வடிவேலவனே குகா!
[கந்தா...]

வ. ஆ. தங்கமயில்

## யாழ். நகரில் ரூ. 9 லட்சம் பெறுமதியான முத்திரைகள் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ். பெரிய தபால் கந்தோரில் இருந்து கோட்டையில் உள்ள தபால் நிலையத்தில் பாதுகாப்பாக வைப்பதற்கு எடுத்துச் செல்லப்பட்ட ஒன்பது லட்சத்துப் பத்தாயிரத்து அறுநூறு ரூபா பெறுமதியான முத்திரைகளைத் துப்பாக்கி முனையில் இனந்தெரியாதவர்கள் கொள்ளையடித்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுமுன் தினம் காலை ஒன்பது மணியளவில் நடைபெற்றது

யாழ்- பெரிய தபால் கந்தோருக்கு வந்த மேற்படி முத்திரைகள் அடங்கிய பையை யாழ். பெரிய தபால் கந்தோர் ஊழியர் ஒருவர் சைக்கிள் வண்டியில் யாழ். கோட்டையிலுள்ள தபால் நிலையத்துக்குக் கொண்டு சென்றாராம்.

தபால் பையுடன் சென்ற தபால் ஊழியரை யாழ். மத்திய கல்லூரிக்கும் சப்பல்வீதிக் குமுடையே துப்பாக்கி ஏந்திய சிலர் மறித்து, ஊழியரைப் பயமுறுத்தி அத்தபால்பையை கொள்ளையடித்துச் சென்றுவிட்டனராம்.

இத்தபால் பையுள் 100 ரூபா, 50ரூபா முத்திரைகள் இருந்தனவென்று தெரிகிறது.

இக்கொள்ளை தொடர்பாக உடனடி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. கொள்ளை நடந்தபோதிலும் யாழ். பெரிய கந்தோரில் வழமைபோல முத்திரைகள் விற்கப்பட்டன. [ஐ]

## கடை ஒடுபிரித்து றேடியோக்கள் திருட்டு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள றேடியோ மனுவல் கடையில் ஒட்டைப் பிரித்து சுமார் 18,000 ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

4 புதிய றேடியோக்கள், 60 கசட்டுகள், ஒரு மைக், 6 ஒலிபெருக்கிகள் திருடப்பட்டுள்ளன.

ஓட்டைப் பிரித்து உள்ளே சென்று 'சீற்றை' உடைத்து கடைக்குள் இறங்கி இந்தத் திருட்டு நடந்துள்ளது.

இத்திருட்டுப் பற்றி வர்த்தக சங்கத்திற்குப் புகார் செய்யப்பட்டுள்ளது. [க]

## இந்திய ---

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்குச் செய்வது மாத்திரமல்ல பலவிதமான உரிமைகளையும் கொடுக்கலாம். தேர்தல் காலத்தில் அரசு வைத்த அரசியல் விஞ்ஞாபனத்தில் தமிழ்மக்களுடைய பிரச்னைகள்என்னென்ன என்பதை அவர் வெளிக்காட்டியிருந்தார். எனவே தமிழர்களுக்குக் கொடுக்கவேண்டிய உரிமைகளைக்கொடுப்பதற்காக பேச்சுவார்த்தை தேவையில்லை என்று கூறிய திரு. எஸ். ஸி, சந்திரகாசன். எங்களுக்கும் விடுதலைப் போராளிகளுக்கும் இருக்கின்ற அணுகுமுறை வேறுபாடு. விடுதலைப் போராளிகள் ஆயுதப்போராட்டத்தினுல் மட்டுமே இந்த விடுதலையைப் பெற முடியும் என்றநம்பிக்கையில் இருக்கிறார்கள். எங்களைப் பொறுத்தவரையில் ஆயுதப்போராட்டம் இதில் ஒருபங்கு என்று கருதுகிறோம் இனப்படுகொலைக்கெதிராகவும், அரச பயங்கரவாதத்திற்கெதிராகவும் நமது மக்களைப் பாதுகாக்க அது நியாயப்படுகிறது. என்பதை நாங்கள் ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு ஆதரவுகொடுக்கிறோம் என்று கூறினுர். [ய. வா]

## இந்தோனேஷிய ..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பிட்டிப் பொலிஸ் நிலையத்தில் இம்மாதம் முதலாம் திகதி முறைப்பாடொன்றைச் செய்திருந்தார்.

திரு. ராமானுஜத்தின் தந்தையாரான திரு. மாணிக்கலிங்கம் 81ம் ஆண்டு முதல் 83ம் ஆண்டுவரை இந்தோனேஷியாவில் இலங்கைத் தூதுவராகக் கடமையாற்றினுர். [இ-செ]

## அரச அதிபர் தலைமையில் குழு சந்நிதி செல்கிறது

[ஐ சண்முகலிங்கம்]

தொண்டமானுறு செல்வச் சந்நிதி ஆலயத்திற்கு ஏற்பட்டுள்ள சேத விபரங்களை மதிப்பீடுசெய்து அரசுக்குச் சமர்ப்பிப்பதற்காக யாழ். அரச அதிபர் திரு வி. எம். பஞ்சலிங்கம் தலைமையிலான அதிகாரிகள் குழு இன்று சந்நிதிக்கு விஜயம் செய்கிறது.

வல்வெட்டித்துறைப் பிரஜைகள் குழுப் பொருளாளர் திரு. கே. முருகமூர்த்தி இந்து கலாசார அமைச்சர் திரு. செ. இராசதுரையுடனும், யாழ். மாவட்ட அமைச்சர் யு பி,விஜயக்கோனுடனும் நேற்றுத் தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டு பேசியதையடுத்து இந்து கலாசார அமைச்சரும், யாழ். மாவட்ட அமைச்சரும் யாழ் அரச அதிபருக்கு விடுத்துள்ள வேண்டுகோளுக்கிணங்கவே யாழ் அரச அதிபர் செல்வச் சந்நிதிக்கு இன்று விஜயம் செய்கிறார். யாழ். அரசாங்க அதிபருடன் மாவட்ட அமைச்சு தொடர்பதிகாரி திரு எஸ்.பி. பாலசிங்கமும், பொதுசனத் தொடர்பதிகாரி திரு. த. குலசேகரமும் செல்கின்றனர்.

வெளிநாடு சென்றிருந்த வல்வெட்டித்துறைப் பிரஜைகள் குழுத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி செல்வச் சந்நிதிக்கு ஏற்பட்ட நிலைமையை அறிந்துகொண்டதனுல் தமது வெளிநாட்டுப் பயணத்தை இடைநிறுத்தி உடனடியாக இலங்கை திரும்பினுர். இவரும் இன்று யாழ்ப்பாணம் வந்து அரசாங்க அதிபர் குழுவுடன் செல்வச் சந்நிதியைப் பார்வையிடச் செல்வார்.

யாழ்.அரசாங்க அதிபர் தலைமையிலான குழு செல்வச்சந்நிதியில் ஏற்பட்ட சேதவிபரங்களையும், அழிவுகளின் மதிப்பீடுகளையும் அரசாங்கத்திற்குச் சமர்ப்பிக்கும். [ஐ]

## அந்த மர்மவிமானம்

[மானிப்பாய்]

நேற்று மாலை 6 மணியளவில் வானில் உயரப்பறந்து சென்ற விமானமொன்றை ஆனைக்கோட்டை, சுதுமலை, மானிப்பாய்ப் பகுதி மக்கள் கண்டு அச்சமும் பரபரப்பும் அடைந்தனர்.

இந்தப் புதுவித அமைப்பிலமைந்த விமானம் காங்கேசன்துறையை நோக்கியே பறந்து சென்றதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

## புலிபாய்ந்தகல் ---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இச்சம்பவத்தின்போது எமது முகாமைக் காட்டிக்கொடுப்பதற்காகப் பொலிஸ் கமாண்டோக்களுடன் வந்த ஒரு துரோகியும் எம்மவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்'' என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [மா]

## சுட்டுக்கொலை!

[திருகோணமலை]

கன்னியாப் பகுதியில் தென்னிலங்கையைச் சேர்ந்த இருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை இச் சம்பவம் இடம்பெற்றது.

கன்னியாப பகுதியில் நால்வர் நடந்து சென்றுகொண்டிருந்தபோது இனந்தெரியாத நபர்கள் அவர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இருவர் கொல்லப்பட்டதாகவும் இருவர் படுகாயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நால்வரும் ஊர்காவல் படையைச் சேர்ந்தவர்களாக இருக்கலாமென நம்பப்படுகிறது. [மா]

## சந்நிதி சுற்றுடல்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

சிப்பாய்கள் படுகாயமடைந்திருக்கலாம் எனத் தெரியவருகிறது

நேற்றைய விமானக் குண்டு வீச்சாலும், ஹெலிக்கொப்டர் தாக்குதலாலும் சுமார் 25 வீடுகள், மடங்கள், கடைகள், கோவில் வடபுறமுள்ள சரஸ்வதி மடம், காரியாலயக் கட்டிடங்கள் யாவும் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. புதிய தேர் எரிந்து சாம்பலானது. தேர் சில்லுகளின் இரும்புப் பட்டங்களும், மற்றும் இரும்புத் துண்டங்களுமே எஞ்சியுள்ளன. நேற்றுமுன் தினம் விமானத்திலிருந்து போடப்பட்ட குண்டுகளில் வெடிக்காத இரு பாரிய குண்டுகள் போராளிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவற்றைத்தொடர்ந்து அதே இரவு இரு தரப்பினருக்கும் மோதல் நடைபெற்றபோதிலும் இராணுவத்தினர் தாக்குதலை நிறுத்திக் கொண்டனர்.

மொத்தத்தில் இராணுவத்தினரின் இத்தாக்குதலால் பல கோடிக் கணக்கான ரூபா சேதம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

## இந்தியஅரசின்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் வெளியுறவுப் பிரிவுத் தலைவர் திரு. பண்டாரி தலைமையிலான குழுவொன்று இம்மாத இறுதியில் இலங்கை வரும் என இலங்கை அரசாங்கம் நம்பிக்கைதெரிவித்துள்ளது

இதனை அமைச்சரவைப் பேச்சாளர் கலாநிதி ஆனந்ததிஸ்ஸ டி அல்விஸ் நேற்று பத்திரிகையாளரிடையே பேசுகையில் கூறினுர்.

மாகாண சபை, அதிகாரப் பரவலாக்கல் என்ற அடிப்படையிலேயே பேச்சுவார்த்தைகள் இடம்பெறும் என்றும், இவை வெற்றிகரமாக அமைந்துவிட்டால் தமிழர் விடுதலைக் கூட்டணியும் பின்னர் தமிழ்த் தீவிரவாதக்குழுக்களும் பேச்சுவார்த்தையில்பங்கு பற்றுமெனவும் அவர் மேலும் நம்பிக்கை தெரிவித்தார்.

## 31-ம் நாள் நினைவஞ்சலி

பாலு

மயில்வாகனம்

(மகேந்திரம்)

தோற்றம்: 03-02-1950

மறைவு: 24-03-1986

திதி: 23-04-1986

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் எங்களை எல்லாம நலவழிகாட்டி அன்புடனும், பண்புடனும், பாசத்துடனும் வாழ்ந்து எங்களை வாழ வைத்த அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும், உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சங்களை விட்டகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்பின் பிறப்பிடங்கள்:

தாய், மனைவி,
சகோதர, சகோதரிகள்,
மாமன், மாமி,
மச்சான்மார்,
மச்சாள்மார்,
உறவினர்கள்,
நண்பர்கள்.

பா. பொன்னுத்துரை,
'லஷ்சுமி வாசா'
கலைவாணி வீதி,
சித்தங்கேணி. C 1938

## மரண அறிவித்தல்

### நமசிவாயம் சிவசம்பு சுப்பிரமணியம்

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் நமசிவாயம் சிவசம்பு சுப்பிரமணியம் காலமாகிவிட்டார். அன்னுர் அன்னரெத்தினத்தின் அன்புக் கணவரும், பராசக்தி, தவமணிதேவி, கமலநாதன், சிவயோகநாதன், சரோஜினிதேவி, பத்மலோஜனி (Germany), குகநாதன் (Germany), சவித்திரி ஆகியோரின் அன்புத் தந்தையும், தேவராசா (மக்கள் வங்கி), Dr சோமசேகரம், ரவீந்திரநாதன் (Asian Electricals), ராஜ்குமார் (Germany), செல்வராணி, தையல்நாயகி ஆகியோரின் அன்பு மாமனுருமாவார். அன்னுரின் தகனக்கிரியைகள் இன்று புதன்கிழமை (23-4-86) பிற்பகல் 2-00 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெறும்.

தகவல்: டாக்டர் சோமசேகரம்.

[C-1949]


## கடைசிநேர வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

''புறொயிலர்'' இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு தொடர்பு: கு. இராசரத்தினம், ஆனந்தநிலையம், நவிண்டில், கரவெட்டி. (C1936)

### தவறிவிட்டது

திருமதி குருநாதலிங்கம் பர்வதபத்தினி முதலாம் வட்டாரம் புங்குடுதீவு என்பவருடைய அடையாள அட்டை 22-4-86 அன்று யாழ்ப்பாணம் கோட்டையில் இருந்து வங்கிக்கு வரும் போது தவறிவிட்டது. கண்டெடுத்தவாகள் மேல்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (C1934)

### தேவை

நல்ல நிலையிலுள்ள ''டீப் பிறிசர்'' உடனடியாகதேவை வைத்திருப்போர் உடன் தொடர்புகொள்க. பூபாலசிங்கம் புத்தகசாலை, பஸ்நிலையம் யாழ்ப்பாணம். (C1945)

புளியங்கூடல் சந்திக்கு அருகாமையில் உள்ள மஞ்சு கிரைண்டிங் மில்லிற்கு திறமான மில் டிறைவர் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய இடம் ராணி ஸ்ரோஸ், வங்களாவடிச் சந்தி, வேலணை. (C1946)

மின்தறி நெசவுத் தொழிற்சாலைக்கு உற்பத்தி அத்தியட்சகர், களஞ்சியப் பொறுப்பாளர் பதவிகளை உடன் பொறுப்பேற்க விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். 29-04-86க்கு முன் விண்ணப்பிக்கவும். இல: A613 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (A613)

யாழ் நகரில் உள்ள பிரபல வியாபார நிறுவனத்திற்கு விற்பனை அனுபவமுள்ள,விற்பனை லிகிதர் (Counter Clerk) தேவை. ஆங்கிலம் எழுத வாசிக்க தெரிந்தவராகஇருக்க வேண்டும். இதற்குமுன் வேலை செய்த அனுபவத்துடன் வயது 30 - 40க்குக் இடைப்பட்டவர்களிடமிருந்துவிண்ணப்பங்கள் கோரப்படுகின்றன விண்ணப்ப முடிவு. திகதி 30-4-86 விளம்பர இல: A612 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (A612)

க. பொ. த.உயர்தரம் சித்தியடைந்த, முன் அனுபவம் உள்ள பெண் தட்டெழுத்தாளர்/லிகிதர்-பிரபல வியாபார ஸ்தாபனத்திற்கு தேவை. முன்அனுபவத்துடன் விண்ணப்பிக்கவும். யாழ். நகரிலிருந்து ஐந்து மைல் சுற்றுடலில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்ப முடிவு திகதி 30-4-86. விண்ணப்பிக்கவும் விளம்பர இல: A611, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [A611]

லிடோ Jaffna
10-30, 2-30, 4-30 6-30
BODY AND SOUL
(Strictly for Adults)
(Colour)

2வது மாதம்
வெலிங்டன்
10-30, 2-30, 6-15
சிவகுமார், மோகன்
அம்பிகா, கவுண்டமணி
நடித்த
நான் பாடும் பாடல்
(கலர்)

எம்பயர் திரையில்
10-30, 2-30, 6-45,
சிவகுமார்-ஜீவிதா
கண்ணைத்திறக்கணும்
சாமி

எம்பயர் 'B' சினிமா
அமுதாப்பஞ்சன் -
ஜெயபாதுரி
அபிமான்
[ஹிந்தி]

## நாவாந்துறையில்
# 7-பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழகம், யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தும் "7 பேர்" பங்கு பற்றும் நொக்கவுட் உதைபந்தாட்டம் இன்று ஆரம்பமாகின்றது.

யாழ் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடாத்தும் இப்போட்டியில் பின்வரும் விளையாட்டுக் கழகங்கள் கலந்து கொள்கின்றன.

குருநகர் பாடும் மீன் கழகம், யாழ்ப்பாணம் கிறீன் பீல்ட் கழகம், அல்லைப்பிட்டி சென். பிலிப் கழகம், அராலி சில்வ ஸ்ராஸ் கழகம், யாழ்ப்பாணம் வைக்கிங்ஸ் கழகம், குருநகர் புனிதவளன் கழகம், பாஷையூர் சென். அன்ரனிஸ் கழகம், நாவாந்துறை சென். மேரிஸ் கழகம், கொக்குவில் பொர்பதி ஐக்கிய கழகம்

சென் நீக்கிலஸ் விளையாட்டு மைதானத்தில் இன்று ஆரம்பமாகும் இப்போட்டியின் இறுதியாட்டம் இம்மாதம் 29-ம் திகதி நடை பெறும். [வி]

# திருட்டு முயற்சி தோல்வி!

[யாழ்ப்பாணம்]

யாழ். நவீன சந்தையில் உள்ள 'மினிமாக்கெற்' கூரைமீது பதுங்கி இருந்த திருடனைக் கண்ட தேசிய பாதுகாப்புத் திட்ட ஊழியர்கள் அத்திருடனைப் பிடிக்கமுயன்ற சமயம் அவன் வெகுசாதுர்யமாகத் தப்பி ஓடிவிட்டான். அவன் இருந்த கூரை மீது சுமார் நானூறு ரூபா பெறுமதியான 'சூட் கேஸ்' கண்டுபிடிக்கப் பட்டது. அந்த சூட்கேசினுள் ஒரு பிரயாணப்பையும், வெட்டுக் குறடும் பூட்டு உடைக்கும் ஆயுதங்களும் காணப்பட்டனவாம். இவை தேசிய பாதுகாப்புத் திட்ட அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ஐ)

# ரூபா 85 ஆயிரம் செலவில் உரக்களஞ்சியம்

[புலோலி]

பருத்தித்துறையில் விவசாயிகளின் நன்மை கருதி சுமார் 85,000 ரூபா செலவில் உரக்களஞ்சியம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது இதற்கான நிதி பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து யாழ் அரசாங்க அதிபர் திரு. வி. எம். பஞ்சலிங்கத்தால் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

இப் பகுதியில் உரக்களஞ்சியம் இல்லாமையினால் விவசாயிகள் அனுபவித்து வந்த கஷ்டங்களை இப்பகுதி விவசாயிகள் யாழ் மாவட்ட கமநல சேவை உதவி ஆணையாளர். திரு, கே. பரமலிங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்ததையடுத்தே இவ் உரக்களஞ்சியத்தை அமைப்பதற்கான நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டது

இவ் உரக்களஞ்சியத்தை புலோலிமேற்கு நாவலர்சனசமூகநிலைய மண்டபத்திற்கு அருகாமையில் நிர்மாணிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வுரக்களஞ்சியக் கட்டடத்தில விவசாய உபகரணங்கள் விற்பனை நிலையம் பயிர் செய்கை உத்தியோகத்தர் அலுவலகம் விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர் அலுவலகம் கால்நடை அபிவிருத்தி உப அலுவலகம் ஆகியனவும் இயங்குமென்று அறிவிக்கப் பட்டுள்ளது.

# சட்டவிரோத மண் ஏற்றத்தடை

[இறுப்பிட்டி]

புங்குடுதீவுப் பகுதியிலிருந்து தனியார்களுக்கோ அல்லது பொது நலனுக்காகவோ வாகனங்களில் மண் ஏற்றிச்செல்வது தடை செய்யப்பட்டுள்ளது.

நாட்டின் இயற்கை வளங்களில் ஒன்றான மண்வளத்தை பாதுகாப்பதனால் மண்ணரிப்பிலிருந்தும் இயற்கை தாவர வளததையும் பாதுகாக்க முடியும். இதனால் மண் ஏற்றிசெல்வது தடைசெய்யப் பட்டிருக்கின்றது அத்தியாவசிய தேவை ஏற்படின் காணியின் உரிமையாளரின் அனுமதியுடன் நடைமுறைப் படுத்தப்பட்டு வருப கட்டுப்பாடுகளுக்கு அமைவாக ஏற்றிச்செல்வதற்கு அனுமதிவழங்கப்பட்டுள்ளது.

இந் நடைமுறைக்கு மாறாக செயற்படுவோருக்கு இணக்க சபையினர் குற்றப்பணம் அறவிடுவதுடன் அம்மண்ணை எடுக்கப்பட்ட இடத்தில் சேர்க்க வேண்டிய நிலைக்கு நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளனர்.


# தேவை

"ஈழநாடு" தேசிய தமிழ் தினசரி பத்திரிகையின் உள்ளூர் செய்திசேவைக்கு கீழ் வரும் இடங்களில் கடமை புரிய நிருபர்கள் தேவை:

1. சுன்னாகம்
2. திருநெல்வேலி
3. வசாவிளான்
4. கொடிகாமம்
5. அச்சுவேலி
6. நெல்லியடி
7. ஊர்காவற்றுறை

விண்ணப்பதாரிகள் தமிழ், ஆங்கில மொழித் தேர்ச்சி, கல்வித்தகைமை, அனுபவச்சான்றுப் பிரதிகளுடன் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராமசேவகரின சான்றிதழ் பிரதியையும் இணைத்து சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும்.

**விண்ணப்பங்கள் 30 04-1986-ந் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.**

விண்ணப்ப மேலுறையின் இடதுபக்க மேல்மூலையில் 'நிருபர் பதவி' என்று குறிப்பிடல் அவசியமாகும்.

முகவரி:

நிர்வாகி,

**ஈழநாடு லிமிட்டெட்,**

த. பெ. இல. 49, யாழ்ப்பாணம்.

(A 602)


## கரை ஒதுங்கிய
# இளைஞரின் சடலம்

[நெடுந்தீவு]

நெடுந்தீவு தென் மேற்கு வெல்லைக்கடற்கரைப்பகுதி அண்மித்த சுடுகாட்டுக் கரையோரத்திற்குச் சமீபமாக இனம் தெரியாத இளைஞரின் சடலமொன்று கரை ஒதுங்கக் காணப்பட்டது.

இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க இவ்விளைஞர் சுமார் ஐந்தடி உயரமென்றும், கன்னத்திலும், கழுத்திலும் துப்பாக்கிச் சூட்டுககாயங்கள் இருந்ததென்றும் சொல்லப்படுகின்றது.

கரை ஒதுங்கிய சடலத்தை இளைஞர் கோஷ்டியினர் சென்று பார்வையிட்டு கடற்கரையில் புதைத்தனர்.

# 'முறைசாரக் கல்வி சிறந்த வரப்பிரசாதம்'

(பச்சிலைப்பள்ளி)

"பாடசாலைக் கல்வியைப் பூரணமாகப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் உள்ளவர்களுக்கு முறைசாரக் கல்வி ஒரு வரப்பிரசாதகமாகும்."

பளை மகா வித்தியாலயத்தில் முறைசாரக் கல்வித் திட்டத்தின் கீழ் தையற் பயிற்சியினைப் பெற்றுவரும் யுவதிகளினால் ஆக்கப்பட்ட தையற் பொருள்கள் சம்பந்தமான பொருள்காட்சியினை கிளிநொச்சி பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் அண்மை திறந்து வைத்து உரையாற்றும்போது இவ்வாறு கூறினார்

பளை கொத்தணி அதிபர் ஏ பி செல்லையா தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றது இவ வைபவத்தில் ஜனாப் மன்சூர் தொடர்ந்து உரையாற்றுகையில் "ஆரம்பக் கல்வியை ஆரம்பிக்கிறவர்களில் சுமார் 30 சத வீதத்தினரே க. பொ த. (சாதாரண) வகுப்பில் உள்ளனர். கல்வி இடையில் தடைப்படுகிறவர்களுக்கு இம்முறைசாரக் கல்வி நன்மையை அளிக்கிறது. பளை மகா வித்தியாலயம், 12 பாடசாலைகளுக்குப் பொறுப்பான ஒரு தாய்ப்பாடசாலையாக இயங்கி வருகிறது 13 பாடசாலைகளின் பொறுப்பை சிறந்த முறையில் ஏற்று நடத்தி வருகிறது" என்றார்.

# சனசமூகநிலைய சமாஜம் அங்குரார்ப்பணம்

(கொழும்புத்துறை)

யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை உப அலுவலகங்கள் ரீதியாகச் சனசமூக நிலையங்களின் சமாஜங்களை உருவாக்கும் திட்டததின் கீழ் வேலணை உப அலுவலகப் பகுதிச் சனசமூக நிலையங்களின் சம ஜத்தை தீவுப்பகுதி சன சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. ஆ இரகுநாதன் அங்குரார்ப்பணம் செய்து வைத்துள்ளார்.

அங்கு அவர் பேசுகையில் இப்பகுதி அபிவிருத்திக்கான முயற்சிகளை இச்சமாஜம் மேற்கொண்டு இக சிராமபக் ளிலசமூக பொருளாதார தொழிற்துறை மேம்பாட்டிற்கு வழிகாட்ட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார் வேலணை உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. சி. சிவராசாவும் பேசினர்.

பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்;- தலைவர்; சி. த. மகாலிங்கம், உபதலைவர்; வே. பி சண்முகநாதன், செயலாளர்: இ. சற்குருநாதன், உபசெயலாளர்: இ. சி. கந்தசாமி; தனதிகாரி; க. பங்கையற் செல்வன்.

# இடமாற்றம் பெறும் ஆசிரியர் விபரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்துக்கு இடமாற்றம் பெற்றுவரும் பிற மாவட்ட ஆசிரியர்களின் விபரத் தொடர்ச்சி வருமாறு:-

### விவசாய டிப்ளோமா ஆசிரியர்

211. திருமதி. ரி. சிவபூசமலர் முருங்கன்,

### பயிற்றப்பட்ட வர்த்தக ஆசிரியர்கள்

212 திரு ஏ யோசப் மாத்தளை, 213 திரு வி சி வல்லிபுரநாதன் நாவலப்பிட்டியா, 214. திரு எம். புவனேந்திரன் பளை.

### வர்த்தக டிப்ளோமா ஆசிரியர்

215. திரு வி கதிரமலை திருமலை. 216. செல்வி. கே.சங்கரப்பிள்ளை கலகொடசென,

### மனையியல் ஆசிரியர்கள்

217. திருமதி. எம். எவ். எல், விக்ரோறியா முல்லைத்தீவு, 218 திருமதி ஆர் ஜெயசிங்கம் வவனிக்குளம், 219. திருமதி. எஸ். பொன்னையா முள்ளியவளை, 220. திருமதி, எ சாந்தகுமார் முல்லைத்தீவு, 221. திருமதி. ஆர். இராதாகிருஷ்ணன் அலம்பில், 222. திருமதி. ரி. சிவஞானசுந்தரம் பாவற்குளம், 223. திருமதி. எ. இரகுநாதன் வவனியா.

### பயிற்றப்பட்ட சங்கீத ஆசிரியர்கள்

224. திரு வி. செல்லத்துரை தலதோய, 225. திரு. வ உருத்திரன் கல்பிட்டி, 226 திருமதி. எஸ் தர்மலிங்கம் வட்டக்கசி, 227. திருமதி. வி அருளானந்தம் வவனியா, 228 திரு. கே. பத்மநாதன் நுவரேலியா, 229 செல்வி ஆர். விந சித்தம்பி மன்னார், 230. திரு. எஸ்.வி. பரமலிங்கம் அடம்பன், 231 திரு சிறிராம்குமார் முள்ளியவளை, 232 செல்வி. கே மயில்வாகனம் புதுக்குடியிருப்பு- முல்லைத்தீவு, 233. திருமதி. ஜே ராமச்சந்திரன் யோகபுரம், 234. செல்வி எம் வேலாயுதம் முல்லைத்தீவு, 235. திருமதி பி.ரி. பாலேந்திரன் வவனிக்குளம்.

### பயிற்றப்பட்ட சமூகக்கல்வி ஆசிரியர்கள்

236 செல்வி. ஏ செல்லத்துரை புத்தளம், 237. திரு சிநாகையா பள்ளிமுனை-மன்னார், 238. செல்வி. எஸ். தர்மலிங்கம் நெடுங்கேணி, 239 செல்வி எஸ். திருநாவுக்கரசு நெடுங்கேணி, 240. செல்வி கே பேரம்பலம், வவனியா,

### பயிற்றப்பட்ட உடற்கல்வி ஆசிரியர்

241. தர்மேசன செட்டிகுளம்

### பயிற்றப்பட்ட நுண்கலை ஆசிரியர்கள்

242 திரு. வி. ஸ்ரீராமச்சந்திரன் புத்தளம். 243 திரு க சதிரவேலு கணடாவளை, 244 செல்வி. ஏ. சந்தசாமி முல்லைத்தீவு.

### பயிற்றப்பட்ட இந்துசமய ஆசிரியர்கள்

245. திரு. கே. கந்தசாமி தொகவந்தலாவ, 246 செல்வி எஸ். சனகசபை டிக்கோயா, 247 திருமதி. பி. அருளானந்தம் கிளிநொச்சி

248 திரு. ஆர். கந்தசாமி (உடற்கல்வி) நாவலப்பிட்டி.

### பயிற்றப்பட்ட கிறிஸ்தவசமய ஆசிரியர்கள்

249. திருமதி ஆர்.பி. தேவரட்ணம் பூவரசம்குளம், 250. செல்வி கே, குமாரசாமி நுவரெலிய.

### கலைப்பட்டதாரி ஆசிரியைகள்

251. திருமதி ஜி. நகுலாம்பிகை கொழும்பு-7, 252. திருமதி ஜி. தில்லைநாதன் தாகாநகர், 253. திரு. என். பரமசிவம் நீர்கொழும்பு, 254. செல்வி எஸ். அருணாசலம் கண்டி, 255. திரு. அருளானந்தம் எஹகலியகொட, 256. திரு கே. செல்வரெட்ணம் பண்டாரவளை, 257. திரு. சண்முகநாதன் கல்கமுக, 258. திருமதி பி செல்லத்துரை குருநாகலை, 259. செல்வி என். குமாரசமி அனுராதபுரம், 260. திருமதி வி. சிவானந்தன் கரவை தீவு, 261, திருமதி ஏ, அருணகிரிநாதன் யோகபுரம் 262 திரு. சி. ஜெகானந்தம் வவனிக்குளம். 263. செல்வி வி. கந்தையா புதுக்குடியிருப்பு- முல்லைத்தீவு, 264. திருமதி ஆர். ஜெகநாயகம் யோகபுரம், 265. செல்வி வை. தம்பையா எருக்கலம்பிட்டி. 226. திருமதி ரி. திருக்குமாரன் எருக்கலம்பிட்டி, 267. செல்வி பி கந்தசாமி வங்காலை, 268 திருமதி கே சணேசலிங்கம் மன்னார், 869 திருமதி என். மக்ஸீன் இரணைத்தொப்பைகுளம், 270. திரு. ரி சுப்பிரமணியம் கிண்ணியா 271 செல்வி எ. கனகரத்தினம் மூதூர், 272 திரு. ஆர். சிவசுப்பிரமணியம் சம்பூர், 273. திரு. கே தனபாலசிங்கம் தம்பலகாமம், 274. திருமதி பி சணேசலிங்கநாதன் திருமலை, 275. செல்வி. என். ஜெகதீஸ்வரி நிலாவெளி, 276. திருமதி வி விஜயகுமார் திருமலை, 267. திருமதி என். நாகேஸ்வரம் கிண்ணியா, 278 திரு ரி சங்கரப்பிள்ளை பன்குளம், 279. திருமதிவி குழந்தைவேலு வவனியா, 280. திரு வி. ஜெகராஜசிங்கம் வவனியா, 281. திருமதிரி ஜெயக்குமாரன் ஓமந்தை. 282 திருமதி பி யோகராசா மாங்குளம், 283 திருமதி ரி. சோதிலிங்கம் வரிககுடியூர், 284. செல்வி எஸ், கார்த்திகேசு நெடுங்கேணி, 285 எஸ் பொன்னம்பலம் வவனியா, 286. திருமதி யூ நடராசா வவனியா, 287. செல்வி வி முத்துத்தம்பி வவனியா, 288 திருமதி எஸ் கருணானந்தன வவனியா, 289. திருமதி எஸ் செல்லத்துரை வவனியா, 290 திரு. எஸ் பரராஜா பூவரசம் குளம், 291 திரு. ஏ. சந்திரசேகரம் உருத்திரபுரம், 292. திருமதி ரி. ரமநாதன் பளை, 293 திரு. ஏ. கே குணசிங்கராஜா கிளிநொச்சி, 294. திருமதி ஆர். குணரெட்ணம் பளை.

### விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்கள்

295. செல்வி ஆ. டி. குமாரசுவாமி ரஜவெல, 296 திரு. ஆர். தவபாலன் நீர்கொழும்பு. 297. திரு எஸ். அருட்பதி களுத்துறை, 298. திரு எஸ்.

(7ம் பக்கம் பார்க்க)

# தெல்லிப்பழைக்கு மாற்றம்

(மாவிட்டபுரம்)

பலாலி விமான நிலைய விஸ்தரிப்பால் யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை, மயிலிட்டி உ அலுவலகம் தெல்லிப்பழைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பலாலி விமான நிலைய விஸ்தரிபபு எல்லைக்கு அருகில் அமைந்திருந்த மயிலிட்டி உப-அலுவலக காரியாலயத்துக்கு ஊழியர்கள் செல்லவும், பொதுமககள் தம்கடமைகளைச் செய்யச் செல்லவும் அச்சமகொண்டிருந்ததைத் தொடர்ந்து மேற்படி உப அலுவலகம் தெல்லிப்பழைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## எமது புதிய வெளியீடுகள்

1. சிவகுமார் — ஜீவிதா
"கண்ணத் தொறக்கணும் சாமி"
(Camera Copy)

2. ஜெயசங்கர் — சுமித்ரா
"ஒருமனிதன் ஒருமனைவி"
(Camera Copy)

3. ஜெயசங்கர் — சுஜாதா
"மீண்டும் பல்லவி" (Pyramid Master)

4. கார்த்திக் — விசு — ஜீவிதா
"சிதம்பர ரகசியம்" (Pyramid Master)

**குணம் வீடியோ சென்ரர்**

42, மணிக்கூட்டு வீதி, — யாழ்ப்பாணம்.
(C 1931) தொலைபேசி; 23665


## தோலகட்டி அறிவித்தல்

### வியாபாரிகளுக்கும் பாவனையாளருக்கும் ஓர் முக்கிய அறிவித்தல்

நெல்லி ரசம் — முந்திரிகை ரசம்

மீண்டும் பாவனையாளர்கள், வியாபாரிகள் அனைவருக்கும் அன்புடன் வலியுறுத்துகின்றோம்.

எமது பெயர் கொண்ட போலி லேபல்கள் மீண்டும் யாழ்நகரிலும் வெளியிடங்களிலும் தலைகாட்ட தொடங்கியுள்ளன என்பதை எமது பிரதிநிதிகள் தகுந்த ஆதாரத்துடன் எமது கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்கள். ஆகவே தற்போது உள்ள சூழ்நிலையில் போலிகளுக்கும் ஏமாற்று பேர்வழிகளுக்கும் மிகவும் ஆபத்தான காலம் என்பதை நினைவில் கொண்டு மிக எச்சரிக்கையாக எமது லேபல்களில் போலிகளை வாங்கவேண்டாமென தாழ்மையுடன் வியாபாரிகளை கேட்டுக்கொள்கின்றோம்.

முக்கிய கவனிப்பு:

எமது லேபல்களில் மணிக்கூட்டு கோபுரம் உண்டு. அதில் நேரம் 6-20 மணியைக் காட்டுகின்றது.

[லேபல்களை உன்னிப்பாக கவனிக்க]

மேலும் விபரங்களுக்கு:

ஜோ. எகட்டன்,
(செனித் மார்கட்டிங்)
யாழ்நகர்.

பணிப்பாளர்,
செபமாலை தாசர் சபை,
தோலகட்டி,
வயாவிளான்;

(A 457)

## பனை அபிவிருத்திச் சபை

### வெளிக்கள உதவியாளர் பதவி

பனை அபிவிருத்திச் சபையில் வெளிக்கள உதவியாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. தகைமை: ஜீ. சீ. ஈ. (சாதாரண) பரீட்சையில் ஆகக்குறைந்தது ஒரே தடவையில் 6 பாடங்களில் சித்தி. இரசாயனம் அல்லது உயிரியல் பாடத்தில் விசேட சித்தி.
2. வயது: 30 வருடங்களுக்கு மேற்படலாகாது.
3. சம்பளத்திட்டம்:
ரூபா 180/- — 240/-
............................ சக அரசாங்க படிகள்
12X5

(புதிய சம்பளத்திட்டம் பரிசீலனையில் உள்ளது)

குறிப்பு:

1. நியமனத்தில் யாழ். மாவட்ட தீவுப்பகுதி விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
2. விண்ணப்பதாரிகள் பதிவுத்தபால் மூலம் தலைவர், பனை அபிவிருத்திச் சபை, தேசிய வீடமைப்புச் செயலகம் என்ற முகவரிக்கு 7-5-86ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
**பனை அபிவிருத்திச் சபை.**

(A 609)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாக மாவட்ட நீதிமன்றம்

தபால்கந்தோர்வீதி தெல்லிப்பழை காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் தவராசாவின் மரணசாதனமில்லா மரணச்சொத்துக்கள் பற்றிய விடயத்தில்

- மரணமெய்தியவர்.

பாலசுப்பிரமணியம் தவராசா கைம்பெண் கிறிஸ்ரீன் பத்மினி, தபால்காந்தோர்வீதி, தெல்லிப்பழை.

- மனுதார்.

மரணசாதன
நியாயாதிக்க
வழக்கு இல. T. 262

எதிராக

(பராயமற்றவர்)

1. பாலசுப்பிரமணியம் தவராசா மகள் சுஜானி நிருபா
2. பாலசுப்பிரமணியம் தவராசா மகள் டிலானி ரிசாரு
3. பாலசுப்பிரமணியம் தவராசா இரஜீவ் நிஷான்.
4. பிறெட் ஜெயவீரசிங்கம் இரத்தினசிங்கம் கைம்பெண் றூபி ஜெயரஞ்சிதமலர் (1-ம், 2-ம், 3-ம் எதிர்வாதிகளின் சட்டப்பாதுகாவலர்) எல்லோரும் தபால்கந்தோர் வீதி, தெல்லிப்பழை.

- எதிர்வாதிகள்.

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986ம் ஆண்டு சித்திரைமாதம் 30ந் திகதியன்று காலை 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி,

வி. இராமச்சந்திர ஐயா
பதிவாளர்.

இன்று 1986 - ம் ஆண்டு பங்குனி மாதம் 27-ந் திகதியிடப்பட்டது.

என்னால் வரையப்பட்டது,
ச.யோகராசா,
மனுதாரின் பதிவுபெற்ற சட்டத்தரணி. (C- 1842)


**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


## யாருடையது?

யாழ் ப. நோ. கூ. சங்கத்தைச் சேர்ந்த திரு இரா. லோகநாதன் என்பவர் இலுப்பையடிச் சந்திக்கு அருகாமையில ஒரு துறப்புக் கோர்வையைக் கண்டெடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர்கள் அலுவலக நேரத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்,

## 31-ம் நாள் நினைவஞ்சலி



நெடுந்தீவு
**செல்வி கணேசலிங்கம் கமலாதேவி (வவி)**
(நிர்வாக உத்தியோகத்தர் சர்வோதயம் கிளிநொச்சி)

அன்னையின் மடியில்:
19-10-1954
ஆண்டவன் அடியில்:
24-03-1986

பண்பெனும் சுடராய்
நீயும்
பாரினில் துலங்கி
இறைவின்
அன்புசால் அரவணைப்பில்
அவனடி சேர்ந்தாய்
எங்கள்
துன்பங்கள் நீங்க நாளும்
துணைநின்ற மகளே அக்கா!
எங்களின் குலவிளக்கே
உன்நினைவு அகலாது
என்றும்

யாழ் மணிக்கூட்டு வீதி 14ம் இலக்க இல்லத்தில் 23-04-86 [இன்று] பகல் நடைபெறும் அந்தியேட்டி வீட்டுக்கிரியைகளில் கலந்து கொண்டு அன்னாரது ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார் உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
பெற்றோர்: திரு' திருமதி கணேசலிங்கம் (C T.B)
சகோதர சகோதரிகள்,
குடும்பத்தினர்,
''விம்ஸ்''
இல. 14 மணிக்கூட்டுவீதி,
யாழ்ப்பாணம்.

C 1926

## இடமாற்றம்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கணேசனத்தாஸ் சிலாபம், 299. திரு. கே. சபாரட்னம் சிலாபம், 300. திரு. வி. அருளானந்தம் கல்முனை, 301. திரு. எம். தாமோதரம்பிள்ளை அட்டாளைச்சேனை, 302. திரு. வி. இராசதுரை பொத்துவில், 303. திரு. ரி. வி. கணேஸ் கல்முனை, 304. திருமதி கே. இராஜேந்திரம் பூநகரி, 305. திரு கே. எஸ். கணேசு காத்தான்குடி, 306. திரு. எம். விஜயரெட்னம் மட்டக்களப்பு, 307. திருமதி எஸ். சிவபாலன் மட்டக்களப்பு, 308. செல்வி ஆ. ஜே. வி. சேவியர் மட்டக்களப்பு, 309. செல்வி ஏ. வயிரமுத்து மட்டக்களப்பு, 310. திரு. எம். அலோசியஸ் மன்னார், 311. திரு. ஞா. இராசதுரை மன்னார், 312 திருமதி பி. நீலயோஜனன் மன்னார், 313. திருமதி எம். எஸ். எஸ்- இரட்ணசாமி மன்னார், 314 செல்வி எஸ். அருளானந்தம்கன்னியா, 315 திரு. எஸ். வேலும்மயிலும் கோபாலபுரம் - நிலாவெளி, 316. திரு. வி. எஸ். சிவசுப்பிரமணியம் திருமலை, 317. திரு. சே. நல்லைநாதன் திருமலை, 318 திருமதி ஏ. சிவசுந்தரம் திருமலை, 319 திரு. என். சிவகடாட்சம் திருமலை, 320 திருமதி ரி. சுப்பிரமணியம் திருமலை, 321. திருமதி பி. ஏகாம்பரநாதன் ஓமந்தை, 322. செல்வி ஜி. சரவணமுத்து ஓமந்தை, 323. திருமதி என். சிவலிங்கம் வவனியா, 324. திரு கே. சீவரெட்னம் நட்டக்கண்டல். (முற்றும்)

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம்
மாவட்ட நீதிமன்றத்தில்

சேச்வீதி சங்கானை காலஞ்சென்ற வீரவாகு சுப்பிரமணியம் என்பவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்துக்கள் பற்றிய விடயத்தில்

-மரணமெய்தியவர்.

வழ. இல. T. 261
சுப்பிரமணியம் அன்னலட்சுமி, சேச்வீதி, சங்கானை

-மனுதார்.

எதிராக

சுப்பிரமணியம் சிவபாலன், சேச்வீதி, சங்கானை.

- எதிர்மனுதார்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1986 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 30 ஆந் திகதி காலை 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின் றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி,

வி. இராமச்சந்திர ஐயர்,
பதிவாளர்.

1986 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 27 ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

என்னால் வரையப்பட்டது,
ச. யோகராசா
மனுதாரின் பதிவுபெற்ற சட்டத்தரணி. (C-1841)


# COMPUTER
## Programming Course
### BASIC LANGUAGE
### 13th BATCH

ஆரம்பம்: 27-4-86 10-00 மணி

வருப்புகள் பாதுகாப்பான இடத்தில்

FOR FURTHER DETAILS CONTACT:

**CANTABIA INSTITUTE**
(PIONEERS IN COMPUTER EDUCATION)
21, Main Street, Jaffna.
Phone 24201 (A 458)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
புதன்கிழமை — 23-4-1986

## ஆலயங்கள்மீது ராணுவத் தாக்குதல்:
# இந்திய மதத்தலைவர்கள் குரலெழுப்ப த.வி.கூ. கோரிக்கை

[சென்னை]

'இலங்கை இராணுவத்தினர் வழிபாட்டுத் தலங்களின் மீது நடத்தும் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களுக்கு எதிராக எல்லா மதத் தலைவர்களும், குறிப்பாக இந்திய மதத் தலைவர்கள் குரல் எழுப்ப வேண்டும்' என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

நேற்று முன்தினம் தொண்டமனாறு செல்வசந்நிதி முருகன் ஆலயத்தின் மீது நடத்தப்பட்ட இராணுவத் தாக்குதல் குறித்துத் தமது கடுமைக் கண்டனத்தைத் தெரிவித்துள்ள மேற்படி அரசியல்குழு வழிபாட்டுத் தலங்கள் மீது தாக்குதல் நடத்துவது இலங்கை இராணுவத்தின் வழக்கமான செயலாக மாறிவிட்டது என்றும் குற்றம் சாட்டியுள்ளது. [ரா]

## இராணுவச் சூட்டினால் விதவையான இளம் பெண்ணின் நகை, பொருள் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

இராணுவச் சூட்டில் கணவனைப் பறிகொடுத்த இளம் விதவை ஒருவரின் வீட்டிலிருந்து ஆயிரக்கணக்கான ரூபா பெறுமதியுடைய நகை, பொருள் என்பன ஆயுதக் கோஷ்டியொன்றினால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த வாரம் கொக்குவில் கிழக்குப் பகுதியில் இடம்பெற்றது. திருமதி சரோஜினிதேவி ஜகத்குமார் என்பவரே தமது உடைமைகளைப் பறிகொடுத்தவராவார்.

தமது தாய் மற்றும் சகோதரர்களுடன் இவர் இருந்து வரும் வீட்டைக் கடந்த ஒன்பதாந் திகதி இரவு ஆயுதந் தாங்கிய கோஷ்டியொன்று முற்றுகையிட்டுக் கொள்ளையடித்துள்ளது.

வீட்டிலிருந்தவர்கள் துப்பாக்கிமுனையில் அச்சுறுத்தப்பட்டு அறையொன்றில் படுக்கையில் வைக்கப்பட்டபின் விதவையான சரோஜினிதேவியிடமிருந்து திருமண மோதிரம், காதணிகள் உட்படக் கஸெற் றெக்கோடர் மற்றும் பெறுமதி வாய்ந்த பொருள்களைக் கொள்ளையடித்தனர்.

தமது கணவனுக்கு நேர்ந்த கதியை எடுத்துக்கூறியபோதிலும் கொள்ளையர்கள் தமது கைவரிசையைக் காட்டத்தவறவில்லை என்று கூறப்பட்டது. சரோஜினிதேவியின் கணவர் ஜகத்குமார் கடந்த ஆண்டு நடுப்பகுதியில் தமது மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது இராணுவ அணியொன்றினால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

ஜகத்குமாரின் சடலத்துடன் அவரது மோட்டார் சைக்கிளையும் அந்த இராணுவ அணி எடுத்துச் சென்றிருந்தது. எவ்வளவு முயற்சித்தும் சடலத்தையோ அல்லது மோட்டார் சைக்கிளையோ திரும்பப் பெறமுடியாதிருந்தது.

## சீருடை கொள்ளை இருவர் விசாரணையில்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பில் கொள்ளை அடிக்கப்பட்ட பொலிசாரின் சீருடைசம்பந்தமாக இரகசியப் பொலிசார் சந்தேகத்தின் பேரில் இருவரைக் கைது செய்துள்ளனர்.

சின்ன உப்போடையைச் சேர்ந்த தியாகராசா, ரவீந்திரன் ஆகிய இருவருமே சந்தேகத்தின்பேரில் கைதானவர்களாவர். (மா)

## நாளை மறுதினம் பாராளுமன்றில்

[கொழும்பு]

லிபியாவின்மீது அமெரிக்கா மேற்கொண்ட விமானத் தாக்குதல் பற்றிய அரசாங்க அறிக்கையொன்றை வெளிவிவகார அமைச்சர் ஹமீத் நாளை மறுதினம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பார். [இ-செ]

## அகதிகளுக்கு 'ஒக்ஸ்பாம்' நிதி உதவி

[வவனியா]

வவனியா மாவட்டத்தில் அண்மைக்காலத்தில் இடம்பெற்ற சம்பவங்களினால் பாதிக்கப்பபட்ட அகதிகளுக்கு 'ஒக்ஸ் பாம்' என்னும் வெளிநாட்டு நிறுவனம் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை நிவாரண உதவியாக வழங்கியுள்ளது.

வவனியா அரசாங்க அதிபர் திரு. கே. ஸி. லோகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் வைத்து இந்த நிதி வழங்கப்பட்டது.

## அரசு அறிவிப்பு:
# கந்தளாய் மரணம் 30 பேர்; 25 பேரைக் காணவில்லை

[திருகோணமலை]

கந்தளாய் அணைக்கட்டு உடைப்பினால் பலியாகிய பலது சடலங்கள் தம்பலகாமம் சுற்றுவட்டாரத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றை இன்று தகனம்செய்வதற்கான ஏற்பாடுகளைத் திருமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை மேற்கொண்டுள்ளது.

இச்சம்பவத்தினால் அகதிகளாகியுள்ள மக்களுக்கு திருமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை, சர்வோதயம் உட்படப் பல தொண்டர் ஸ்தானங்கள் உதவிவருகின்றன.

இவ்விபத்தில் 30 பேர் மரணமானதாகவும் 25 பேர் காணமல் போய்விட்டதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது. இத்துடன் தற்போது கொழும்பு—கந்தளாய் வீதி போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையிலுள்ளதால் தற்காலிகமாக ஹபறனை-திருமலை வீதியில் 134ம் மைல் கட்டையடியிலுள்ள வீதியைப் பயன்படுத்த மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட ரயில்பாதை திருத்த வேலைகளை மேற்கொள்ளவெனக் குழுவொன்று அங்கு சென்றுள்ளதாகப் புனர்வாழ்வுத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த அணைக்கட்டில் வெடிப்புகள் ஏற்பட்டிருப்பதைச் சில பத்திரிகைகள் முன்கூட்டியே சுட்டிக்காட்டியதுபற்றி அரசாங்கப் பேசசளர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், இப்பத்திரிகைகள், அணை உடைப்பெடுத்த இடத்திலிருந்து சுமார் ஒரு மைல் தூரத்தில் உள்ள வெடிப்புகளையே சுட்டிக்காட்டியிருந்தன வென்றும், எனவே அரசாங்கம் இது விஷயத்தில் அசிரத்தையாக இருந்துள்ளதெனக் கூறமுடியாதெனவும் கூறினர். [செ]

## பட்டுக்குடைத் திருவிழா

[யாழ்ப்பாணம்]

நல்லூர் கைலாய பிள்ளையார்கோவில் பட்டுக்குடைத் திருவிழா நாளை வியாழக்கிழமை நடைபெறவிருக்கிறது. காலை 10 மணிக்குத் தீர்த்தமும் அதன்பின் விசேஷ யாகபூஜையும் மகா அபிஷேகமும் நடைபெறும் துவஜாஅவரோகணம் மாலை 4-30 மணிக்கு இடம்பெறும்.

## ரெலோ அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

கடந்த வருடம் ஏப்ரல் 21ம் திகதி அரச ஆயுதப்படைகளின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கான 8 போராளிகளுக்கு ஓராண்டு அஞ்சலி செலுத்தி தற்பொழுது தமிழீழவிடுதலை இயக்கம்அஞ்சலிவெளியிட்டுள்ளது.

அருண், கரிகாலன், ரஜனி, மணி, சோமு, தயா, மதன்லால், சையன் ஆகியோருக்குத்தமது 1ம வருட நினைவஞ்சலியை மேற்படி இயக்கம செலுத்தியுள்ளது.

"அரச கூலிப்படைகளுக்கு எதிராக ஆரம்பித்த எமது போராட்டம் இன்று புரட்சி என்ற கேஷமாக மாறியுள்ளது. எனவே மறைந்த எம் தோழர்களின் உடலகளிலிருந்து சொட்டிய குருதி எம் மண்ணில் சிவந்த புரட்சித் தீயை வளர்க்கத்தயங்காது என்ற உறுதியுடன் முன்னேறுகின்றோம் விடிவு ஒளி நோககி என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சசிதரனை விடுதலைசெய்யக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சங்கிலியன் புனர்வாழ்வுக் கழக அமைப்பாளர் டாக்டர் ப. சசிதரனை விடுதலைசெய்யுமாறு கோரி அராலை மேற்கு ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தினர் ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பியுள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சர் யாழ் அரசாங்க அதிபருக்கும் இம்மகஜர் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (க)

## நீதவான் அறையில் துப்பாக்கிச்சூட்டு அடையாளங்கள்

[யாழ்ப்பாணம்]

யாழ் நீதிமன்றத்திலுள்ள நீதவானின் அறைக்குள துப்பாக்கிச்சூட்டினால் ஏற்பட்ட துவாரங்கள் காணப்பட்டன.

விடுமுறையின் பின்னர் நேற்றுமுன்தினம் நீதிமன்றம் ஆரம்பமானபோது, நீதவான் அறைக்குள் யன்னல், சுவர்களில் சன்னங்கள் பாய்ந்த அடையாளங்கள் இருந்தன.

அறைக்குள் உள்ள மின் விசிறியிலும் சூட்டினால் சேதம் ஏற்பட்டிருந்தது.

இதற்குமுன்னரும் நீதிமன்றமும், நீதவான் அறையும் சூட்டினால் சேதமடைந்தது குறிப்பிடத்தக்கது. [க]

## ஓமந்தையில் கண்டி வீதி தடை

[வவனியா]

ஓமந்தை இராணுவ முகாமிற்கு அருகாமையிலுள்ள யாழ்ப்பாணம் - கண்டிவீதியில் வாகனப் போக்குவரத்துத் தடைசெய்யப்பட்டுளளது.

யாழ்-கண்டி வீதி மூடப்பட்டுள்ளதால் புதிதாகப் போடப்பட்டுள்ள பாதையால் வாகனப் போக்குவரத்துச் செய்வது மிகவும் கஷ்டமாகவுள்ளதாகத் தெரிகிறது.

புதிய பாதை அரை மைல் தூரம் கூடுதல் என்றும், மழை காலங்களில் இப்பாதையால் வாகனங்கள் போக்குவரத்துச் செய்வது கஷ்டமென்றுக்கூறப்படுகிறது. [வா]

## மரண அறிவித்தல்

### திருமதி கண்மணி சீனிவாசகம்

திருமதி கண்மணி சீனிவாசகம் காலமானார். இவர், சீனிவாசகத்தின் அன்பு மனைவியும், தேவதாசன், பரமேஸ்வரி, தங்கராசா [பிரான்ஸ்] யோகேஸ்வரி, அற்புதமலர், அற்புதராசா சவியுகவரதன் [சவுதி] ஆகியோரின் அன்புத் தாயாரும், கருணநிதி, பரராசசிங்கம், நற்குணராசா, வனிதா, கமலராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற ஆறுமுகம், செல்வம் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். அன்னாரது பூதவுடல் தகனக் கிரியைக்காக இன்று [23-4-86] பி.ப. 2-00 மணிக்கு கொக்குவில் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

மக்கள், மருமக்கள்.

54/4, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம். [A-614]

### பொ. சின்னநஞ்சன்

பொ. சின்னநஞ்சன் காலமாகிவிட்டார். இவர், காலஞ்சென்ற சின்னநஞ்சியின் அன்புக்கணவரும், சி. சிவனையா சிற்றம்பலம் சங்கரையா [வேலணை மத்திய மகா வித்தியாலயம்], ராமு, தாயம்மா, ஆகியோரின் அன்புத் தந்தையும், மல்லிகா, புஷ்பம், மனோகரி, சிங்காரம் [கோணாவில்] ஆகியோரின் மாமனருமாவார். ஈமக்கிரியைகள் இன்று [23-4-86] பகல் 1-00 மணியளவில் கொக்குவில் மயானத்தில் நடைபெறும்.

சங்கரையா, C/o S. ராமு,
[C-1948] கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

### திரு. க. கா. முருகேசு

நெல்லியடி கரவெட்டியைச் சேர்ந்த திரு. க. கா. முருகேசு (கம்பளை வர்த்தகர்) 21-4-86 திங்கட்கிழமை காலமானார். இவர் திருமதி செல்லம்மாவின் அன்புக் கணவரும் திரு க. கா. இராசையா, திரு க. கா. தங்கராசா ஆகியோரின் சகோதரரும். திரு. வ. கந்தசாமியின் மைத்துனரும் திரு சுந்தரலிங்கம் (பரந்தன்), திரு. இராதாகிருஷ்ணன் (ஜேர்மனி), திருமதி சந்திரவதனா, வதனி ஆகியோரின் தந்தையும், திரு. நாகேந்திரன் (நில அளவைத்திணைக்களம), காலஞ்சென்ற திரு.ச. திருச்செல்வம், திருமதி சிவகாமசுந்தரி, திருமதி பிருந்தாதேவி ஆகியோரின் மாமனாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 22-4-86 செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. நண்பாகள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். (C 1925)

### கந்தையா சிவகிரீடம்
(Telecom. Eng. Abu-dhabi)

21, செங்குந்தா வீதி. நல்லூரைச் சேர்ந்த கந்தையா சிவகிரீடம் அபுதாபியில காலமானார். அன்னார் காலஞ்சென்ற டானியல் கந்தையா (பிரசித்த நொத்தாரிசு) செல்லம்மா (இளைப்பாறிய தலைமை ஆசிரியர், காசிப்பிள்ளை வித்தியாலயம், நல்லூர்) ஆகியோரின் அன்பு மகனும், பொன்மலரின் அன்புக் கணவரும், மோகன் (U. K), மகி (ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பேராதனை), சயந்தன் (U K.), பாலன் (சென். ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி சின்னத்துரை (ஆசிரியை), காலம் சென்ற அருளானந்தன் (கனடா), ரமானந்தன் (கனடா), Dr. விவேகானந்தன் (U K., திருமதி பாக்கியநாதன் (விவசாயப் பயிற்சிக்கல்லூரி, திருநெல்வேலி) ஆகியோரின் அருமைச் சகோதரரும் ஆவார் அன்னாரின் ஈமக்கிரியைகளின் விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: திருமதி பொ. சிவகிரீடம்

(C-1939)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு சித்திரை மாதம் 23 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389, 24126.